செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு கககூஅ-கார்த்.	பகுதி
சூரு	1967—டிசம்பர்	உ

க.	வள்ளுவத்தின் அடிப்படையில் புதுவாழ்வு சூ. மி. டயசு, I. P. S., D. I. G., திருச்சி.	க
உ.	இருவகைக் கற்பனைகள் மு. வை. அரவிந்தன்	கஉ
ரு.	ஐயுணர்வு இர. பன்னீர்செல்வம் எம். ஏ.,	கசு
ச.	நகை புலவர் திருமேனி. நாகராசன்	உ௰
ரு.	திருக்குறளும் வழக்குத்துறைக் கருத்தும் பி. அரங்கசாமி நாயுடு, பி. ஏ., பி. எல்.,	உஅ
சூ.	மேற்கணக்கின் மேனூல் திருக்குறள் பண்டித வித்துவான் தி. சங்குப்புலவர்	ருரு
எ.	திருவள்ளுவரும் தொழிலாளரும் டி. சந்தோசம், எம். ஏ., பி. எல்., எம். எல். சி.	ச௰
அ.	வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இ. பழநியப்பன்	சசு
சு.	வள்ளுவர் காட்டும் வழி ஆர். இராமாநுசம், பி. ஏ., பி. எல்.,	ருஉ ருஅ
க௰.	சங்கச்செய்திகள்	
கக.	மதிப்புரை	சுஎ

மதுரைத் தமிழ்ச் சங்கம்

செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௮-கார்த்.	பகுதி
௬௫	1967—டிசம்பர்	௨

வள்ளுவத்தின் அடிப்படையில் புது வாழ்வு

திரு. சூ. மி. டயசு, I. P. S., D. I. G., திருச்சி.

பொய்யில் புலமைத் திருவள்ளுவர் யாத்த தமிழ்மறையாம் திருக்குறள், சாதி சமய வேறுபாடும், நாட்டு வரம்புமின்றி உலகிற் பிறந்த எல்லா மக்களுக்கும் எத்துறையிலும், நல்வாழ்க்கைக்குப் பொதுவான உண்மைகளை முப்பாலில் நாற்பொருளெனச், சொல் நயம் கருத்தாழத்தோடு, விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறும் நூல் என்பதை நாமறிவோம். ஆனால் இவை எல்லாவற்றையும் விடத் தனிச் சிறப்பொன்று வள்ளுவர் நூலுக்கு உண்டென்றால் அது தமிழன்னைக்கு வானளாவும் புகழைத் தேடித்தந்த இப் பொது நூலின் "காலத்திற்கும் அப்பாற்பட்ட தன்மை"யேதான்

என்று சொல்லலாம். உலக வரலாற்றை ஆராயுங்கால் அதன் ஏடுகளில் பெரும்பாலும், மாறி மாறி மன்னர்கள், மக்கள் சமுதாயம் இவற்றின் தோற்றமும், எழுச்சியும், வீழ்ச்சியும் காணப்படுவதோடு, ஆங்காங்கே எண்ணங்களின் எழுச்சி, வீழ்ச்சியும் பிணைக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும். தலைமுறை தலைமுறையாக வீழ்ச்சியே இல்லாத எண்ணங்களைத் தோற்றுவிப்பவர்கள் மகாத்மாக்கள். அந்த வரிசையிலே தோன்றியவர் திருவள்ளுவர். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வள்ளுவர் அருளிய வாய்மொழிகள் அன்று எப்படி ஆழ்ந்த உண்மைகளாக இருந்தனவோ, அதே முறையில் இன்னும் ஒப்பற்ற வாய்மைகளாகவே திகழ்கின்றன. இந்த நிலை தொன்றுதொட்டு யாவருமறிந்த பழந் தமிழ்ப் பண்பாட்டு முறைகளையொட்டி மாத்திரமன்றி, இன்று புதிதாகக் கருதப்படும் பல சமூக, பொருளாதார, விவசாய வாழ்க்கை முறைகளைப் பற்றியும் இருப்பதுதான் வள்ளுவரின் ஆழ்ந்த ஞானத்திற்கும், பரந்த அனுபவத்திற்கும், முதிர்ந்த தீர்க்க தரிசனத்திற்கும் தனிச் சான்று என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் யானறிகிலேன்.

2. திருக்குறள்தோன்றியகாலம்பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் பலதரப்பட்ட கருத்துக்கள் பரவலாக நிலவி வந்தன. ஆனால் தமிழ் மொழி வல்லுநர்கள் சிலர் செய்த விரிவான ஆராய்ச்சியின் பயனாக இன்று வள்ளுவர் நூல் கடைச்சங்க காலத்தின் மையத்திலே தோன்றியது என்று துணிவுடன் கூற இயலும். ஏனெனில் புறநானூற்றில் ஆலத்தூர் கிழார்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறளை நேரடியாகத் தமது

"நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ"

என்ற பாட்டில் மேற்கோளாகக் கையாண்டது மாத்திரமன்றி அறம் பாடிற்றே என்று திருக்குறளின் "அறம்" என்னும் நூற்

பெயரையும் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல மணிமேகலைக் காவியமியற்றிய கூலவாணிகன் சாத்தனார்,

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறட்பாவை அங்ஙனமே எடுத்தாண்டு,

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று வள்ளுவனாருக்குப் புகழ்ப் பெயரும் கூறிப் பாடினார். இதிலிருந்து திருக்குறள் மேற்கண்ட புறப்பாட்டிற்கும், மணிமேகலைக் காவியத்திற்கும் முந்தியது என்பது தெளிவு. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய இரட்டைக் காவியங்கள். இக் காலம் எது என்று நிர்ணயிப்பதற்குக் "கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்", சேரன் செங்குட்டுவன் சிறப்புடன் அமைத்த பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் கோட்டத்தில் வழிபாடு தொடங்கும் நிகழ்ச்சிக்கு வந்திருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் காணப்படும்குறிப்பு, திட்டவட்டமாக உதவுகிறது. இந்தக் கயவாகுவேந்தனின் காலம் இலங்கை வரலாற்று நூலான மகாவம்சத்திலிருந்து கி. பி. 2-ஆம் நூற்றாண்டாக ஐயமறத் தெரிகின்றது. ஆகவே சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரண்டாம் நூற்றாண்டு நூல்கள் என்று முடிவு கட்டலாம். கடைச்சங்க காலம் ஏறக்குறைய கி. மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரையாக இருக்க வேண்டுமென்றும் பொதுவாக ஒப்புக்கொள்ள முடியும். இத்தகைய ஆராய்ச்சியை இன்னும் சிறப்புடன் செய்ததன் பயனாகத் திருக்குறள் அரங்கேற்றிய ஆண்டு கி மு. 31-ஆம் ஆண்டு என்று சில அறிஞர்கள் முடிவு கட்டியுள்ளார்கள்.

3. இப்படி 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட திருக்குறளில் காணப்படும் கருத்துக்கள் பல, இன்றைய நிலைக்குப் பலதுறைகளிலும் ஏற்றவும் பொருத்தமுடையனவாக அமைவது தான், காலவரம்புக்கு அப்பாற்பட்டதாகவுள்ள வள்ளுவத்தின்

சிறப்பு. உதாரணமாகப், பொருட்பாலில் இறைமாட்சி என்ற முதல் அத்தியாயத்தில்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
இறையென்று வைக்கப் படும்"

என மக்கள் நலம்பேணும் நல்லரசுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவனர் அந்த அரசு நாட்டு நலனுக்காகப் பொருளாதார வழி வகை செய்யும் முறைகளை வரையறுக்கும்போது,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்றூர். இன்றைய நிதியமைச்சர்களுக்கும் இந்தப் போதனை மிக்க பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இதன் பின்னர்த் தெரிந்து செயலாற்றும் வகைகளைப்பற்றிக் கூறவந்த தெய்வப் புலவர்,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

என்று பொருளீட்டலில் தொழில் செய்வோர் ஆராயவேண்டிய இனங்களைத் தெளிவாக எடுத்துரைத்தார். இதே முறையில் பொதுத் துறையில் திட்டங்களை எடுத்து நிறைவேற்றப் புகும் அரசுக்கும், தெரிந்து செயலாற்றப் புகுங்கால் பொருள், கருவி, காலம், வினை, இடம் இவை யாவற்றையும் நன்குணர்ந்துதெளிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதையொட்டியே,

"பொருள்கருவி காலம் வினைஇடனே டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

எனப் பொதுவாக 'வினைசெயல் வகை' என்னுமதிகாரத்திற் கூறிய வள்ளுவர் பெருமான், வலியறிந்து வினை செயப்புக வேண்டும் என்று அறிவுறுத்தும் வகையில்,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

என்றூர். இங்ஙனம் வலியறியாது செயலாற்றப்புகுந்த காரணத்

தால் நாடிழந்த மன்னரும், பொருளிழந்த தொழில், வணிக, விவசாய அதிபரும், அன்றும் இன்றும் பலப்பலர் சின்னஞ்சிறு இசுரேல் நாட்டின் கையிலே, கூட்டுச் சேர்ந்த அரபு நாடுகள் சமீபத்தில் தோல்வி காண ஏற்பட்டது மாற்றான் வலி உணராது அவசரப்பட்டுப் போரில் இறங்கிய காரணத்தால்தான் என்று போர்முறையும் பயனும் அறிந்தவர் கூறுகின்றனர். அடுத்துக், காலமும் அறிந்து வினை செய்ய வேண்டுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டும் முறையில் செந்நாப்போதார்,

''பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது''

என்றுஅருளிச்செய்தார். இதற்குச் சான்றாகப் போரில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நெப்போலியனை ருசியாவில் முறியடித்தது "கூதிர்காலம்'' என்னும் படைத் தலைவனேயாகும் (General Winter) என்று வரலாறு காட்டுகின்றது. இறுதியாக இடனும் ஆராய்ந்து தான் காரியம் செய்யப் புகவேண்டும் என்ற உண்மையைத் தெளிவுபடுத்தும் நோக்கோடு,

''நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற''

என்று கூறி வைத்தார். போர்முறையில் இதை விளக்கும்வகையில் 1962-இல் நமது இராணுவம், சீனப்படைகளை அவர்களுக்குப் பழகிய இடமான இமயப் பனிமலையில் எதிர்கொண்டது, நமது தோல்விக்கு ஒரு காரணமென ஒத்துக் கொள்ளப்படுகிறது. இங்ஙனம், பொருள், கருவி, வினை, இடம், காலம் இவற்றை ஆராய்ந்து செவ்வனே செயலாற்றும் திறனை இன்றைய நிர்வாக மேதைகள் (Modern management principles என்று) புதிய கோட்பாடுகளாகத் தொகுத்து எடுத்தோத நான் பயின்றிருக்கின்றேன். ஆகவே, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வள்ளுவர் தந்த கருத்துக்கள் இன்னும் நம் புதுவாழ்விற்கு நல்வழியாக அமைந்திருக்கின்றன என்பது தெளிவு.

4. இனி, வினையாற்றும் படலத்தில், யாரைக் கொண்டு வினையாற்றுதல் என்ற பிரச்னை எழும்போது, ஏவல் என்ற பகுதி

முக்கியத்துவம் பெறுகின்றது. ஏவலுக்குத் தகுதியானவரை ஆராய்ந்தெடுத்தல் அவசியம்-இது இன்றைய நிர்வாகக் கலையிலே (Selection-தேர்வு) என்ற பகுதியைச் சாரும். தேர்வு இலக்கணத்தைச் சொல்லும் வகையில்,

"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண்உடையான் கட்டே தெளிவு"

என்று கூறினர். அதிலும் எல்லா உயர்ந்த அம்சங்களையும் ஒருங்கே ஒரு மனிதனிடம் எதிர்பார்க்கலாகாது என்ற உண்மையைக் கூறுமுகத்தான்,

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்றும் சொல்லி வைத்தார். ஏவலாளர்களுக்குத் தனிக்குறிப்பு எழுதும்பொறுப்புள்ளவர்கள் இந்தக்குறளை மனத்திற் கொள்வார்களானல் தனிக்குறிப்புப்பற்றி முரண்பாடான அபிப்பிராயங்கள் நிலவ வழியில்லாது போய் விடும். தேர்வு செய்யப்பட்ட ஏவலரைச் செய்யுந் தொழிற்கண் செலுத்தல் அடுத்த கட்டம். ஆங்கிலத்தில் இந்நிலையை (Induction-வரவேற்றல்; Placement -செலுத்துதல், Delegation-ஒப்படைத்தல்) என்று மூன்று பகுதியாகப் பிரித்துச் சொல்லுவார்கள். மொத்தத்தில் இந்த ஒப்புவிப்பு முறையின் அடிப்படை இலக்கணத்திற்கு விளக்கம் தரும் வகையில் திருவள்ளுவரின்

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளைவிடச் சிறந்ததொன்று இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஒப்படைப்பு நம்பகமான முறையில் அமைய வேண்டுமென்று வலியுறுத்தும் வகையில்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்று கூறிய திருவள்ளுவ நாயனர், ஒப்படைத்த பின்னர்த் தொடர்ந்து செயலாற்றும் திட்டத்தையும் மறந்து விடக் கூடாது

என்றும் உடனடியாகவே விளக்கம் செய்தார். இவ்வாறு இடைவிடாத கவனம் செயல்முறையில் ஈர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லத்தான் தமிழ்மறைப் போதகர் ''பொச்சாவாமை'' என்ற தலைப்பில்

''உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்''

என்று மறதியின்றி நினைத்த செயலைச் சிறப்புடன் தொடர்ந்து கவனித்து முடிக்கும் வகையை விளக்கினார். ஆங்கிலத்தில் நிர்வாகக் கலையின் இந்தப் பகுதிக்கு (control -பிடிப்பு) என்று பெயர். இவையெல்லாம் சேர்ந்து தான் இன்றைய நிர்வாகக் கலையின் தலைசிறந்த அம்சங்களாக அமைகின்றன.

5. இப்படிச் செயலாற்றப் புகுந்தகாலை ஆங்காங்கு இடுக்கண் விளைதல் இயல்பு. இந்நிலையில் உண்மையான ஊக்கம் வினையாற்றப் புகுந்த தலைவனிடம் இருக்குமாயின், இந்த இடைஞ்சல்கள் அவனுக்கு ஒரு வகையிலும் இடர்ப்பாடு செய்யா என்பதை எடுத்துக் காட்ட,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்''

என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினார். இதே கருத்துள்ள மற்றொரு குறள்,

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை''

உள்ளத்தில் கண்ட ஊக்கத்தின் அளவில் தான் வினைமாட்சி தேறும் என்பது,

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

என்ற குறட்பாவின் உட்கருத்து. இதற்கிடையே மடியென்னும் மாசு புகுந்து விட்டாலோ படிப்படியாக எல்லாம் கெட்டுவிடும் என்பதை,

''குடிஎன்னும் குன்ற விளக்கம், மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும்''

என்று குறளின்வாயிலாக அறிவுறுத்தினர். ஆனல் உண்மையான மனத்திட்பம் உடையார்க்கு வினை வலிமையும், செயலில் வெற்றியும் தாமாக வரும் என்பதைக்காட்ட,

''வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற''

என்றும்,

''எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்''

என்றும் சொல்லி வைத்தார். இப்படித் திண்ணிய மனத்தோடு மக்கள் சேவையையே கருத்தில் கொண்டு, நல்ல முறையில் திட்டமிட்டு,

''பொருள்கருவி காலம் வினைஇடனே டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''

ஆற்ற முற்படும் ஒருவருக்குத் தெய்வமும் துணை நிற்கும் என்று சொல்ல வந்த வள்ளுவ தேவனர்

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

என்று தெளிவாக எடுத்துச் சொன்னர்.

6. இதுபோல் இன்று பரவலாகப் பேசப்படும் சனநாயக சமதர்மச் சமுதாயக் கோட்பாடுகள் எல்லாம் அடிப்படையில் ஒப்புரவறியும் தன்மையுடையவை என்று சொன்னல் மிகையாகாது. பழங்காலந்தொட்டே தமிழர் சமுதாயம் ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று புறநானூற்றில் சொல்லப் பட்டிருக்கும் பண்பின் அடிப்படையில் அமைந்துள்ளமை அறியலாம். இதை விளக்கும் நோக்குடன் தான் தெய்வப் புலவரின் ஒப்புரவு முறை தரப்பட்டது என்று கூறலாம். ஈகையினும் உயர்ந்த ஒப்புரவு, சமுதாயத்திலுள்ள குறைகளுக்குத் தாமாகவே

உணர்ந்து தீர்வுகாணும் உயர்ந்த பண்பெனக் கொள்ளவேண்டும். இதை விளக்கும் வகையில் திருவள்ளுவர்,

"தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று நேர்முகமாகவும் – சமுதாயத்திற்குக் காந்தி மகான் கொள்கைப்படி தரும கருத்தாவாகப் பயன்படும் தலைவனின் செல்வத்தை ஊருணி நீர் நிறைந்த தன்மைக்கும், பயன் மரம் உள்ளூரில் பழுத்த நிலக்கும், மூலிகை மரம் மக்கட்குப் பயனுள்ள தாக அமைந்த வகைக்கும் உவமை செய்து

"ஊருணி நீர்நிறைந் தற்றே; உலகவாம்
பேர்அறி வாளன் திரு"

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்
நயன்உடை யான்கண் படின்"

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால், செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

என்ற மூன்று குறள்களில் அழகாகச் சொன்னார். உண்மையான முறையில் மக்களுக்கு உதவி செய்யப்புகும் ஒப்புரவாளர் கைம்மாறு வேண்டார் என்று தெளிவுபடுத்த,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு?"

என்று கூறிய வள்ளுவனார், சமூக சேவையின் பிரதிபலன் எதிர்பாராத பெருந்தன்மையை மேகத்திற்கு ஒப்பிடுவதை விடச் சிறப்பாகச் சொல்லியிருக்க முடியாது. இதற்கும் ஒருபடி உயர்ந்த முறையில் சமுதாயத்திற்காகத் தாங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துத் தங்கள் உயிரையும் தியாகம் செய்த உத்தமர்களைப்பற்றி எண்ணியே வள்ளுவனார்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்று பாடினார். காந்தி அடிகள் போன்ற வள்ளுவர் காலத்திற்குப் பின்னுள்ள மகான்களையும் தீர்க்கதரிசனமாகக் கருத்தில் கொண்டு

தான் பொய்யில் புலவர் இந்தக் குறள் வெண்பாவை அமைத்து இருக்க வேண்டும் என்று சொல்வதிலும் தவறில்லை.

7. நம் நாட்டில் இன்றைய முக்கியமான பிரச்னை விவசாய உற்பத்தியைப் பெருக்குதல். இப்பணி செவ்வனே செய்யப் பெறுமாயின் நமது உணவுப் பிரச்னைக்கு நல்ல முறையில் வெகுவிரைவில் தீர்வு காண இயலும். இத்துறையில் நல்ல ஆராய்ச்சித் திறனுடையவர்கள் நமது குறைபாடுகளை நன்கு கவனித்து, ஏறக்குறைய 15 சத விகிதம் தான் நமது உணவு உற்பத்தி, நம்முடைய தேவைக்குக் குறைவாக இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால் நம் பாரத நாட்டில் இன்று சாகுபடி செய்யப்படும் விளை நிலம் சாகுபடி செய்யக்கூடிய நிலப் பரப்பில் மூன்றில் ஒன்று தானென்றும், அதே போல் பருவ மழை சரியாகப் பெய்யும் சாதாரணமான ஓர் ஆண்டில் நமது நீர்வளத்தைக் கொண்டு இந்த மூன்று மடங்கு நிலங்களுக்கும் பாசன வசதி செய்ய முடியுமென்றும், அந்த நிலங்களின் விளைச்சல் நல்ல உழவு, எருவிடுதல், களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், காப்பு முறைகளைக் கடைப்பிடித்தால் கண்டிப்பாக நம் நாட்டில், இன்று ஏக்கருக்குச் சராசரி 440 கிலோ கிராம் உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் நிலையிலிருந்து சப்பான் முதலிய நாடுகளில் இருப்பதைப் போல ஏறக்குறைய சராசரி ஏக்கருக்கு 1,300 கிலோ கிராம் சாகுபடி செய்ய முடியும் என்று உறுதியாகக் கூறுகின்றனர். இப்படி மூன்று பங்கு நிலத்தில் மூன்று பங்கு சாகுபடி செய்தால் விளைச்சல் 3 × 3 = 9 மடங்கு அதிகரித்துவிடுமாகையால், 15 சத விகிதம் துண்டு விழுதலால் ஏற்படும் குறைபாடு இலகுவாக ஈடுகட்டப்பட்டு உணவுப்பொருள் ஏற்றுமதி செய்யக்கூடிய சிறப்பான ஒரு நிலையை நாம் அடையலாம் என்பது தெளிவு. பருவக் காற்று நன்கு அமையாவிட்டாலும், ஆழக்கிணறுகளைத் தோண்டி நமது பாசன வசதிகளை அதிகப்படுத்தி நமது உணவு சாகுபடியைக் கணிசமாக விரிவுபடுத்தலாம். இப்போதைக்கு நமது உற்பத்தியை இரு மடங்காகச் செய்து விட்டாலே நமது பிரச்னைகள் எலலாம் ஆதவன் முன் பனிபோல விலகிவிடும். இதற்குப் பல புதிய முறைகள் அவசியமென விவசாய நிபுணர்கள் கருதுகின்றனர்.

9. இந்த முறைகள் எல்லாம் இன்றைய நவீன விஞ்ஞான ஆராய்ச்சி முறைகள் என்று பலர் நினைக்கலாம். ஆம்! உண்மையில் பரந்த ஆராய்ச்சியின் பயனாக நிபுணர்கள் சமீப காலத்தில் கண்ட இந்த முடிவுகளைத்தான், வள்ளுவர் ஆழ்ந்த உலக ஞானங் கொண்டோ, பரந்த உழவுத் துறை அனுபவம் பெற்றோ, அன்றித் தீர்க்க தரிசன வலிமையினாலோ, 2000 ஆண்டுகளுக்கு முன்னரே விரிவாகவும், அழகாகவும், ஆணித்தரமாகவும் கூறியிருக்கின்றார். உதாரணமாக வள்ளுவனார் உழவுப் பொருள் விளக்கும் பகுதியில்,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

என்று சொன்னது - இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாகக் கழனிகளுக்கு முறை நீர்ப்பாய்ச்சி, இடையே உலர்ந்து காற்றாட விட்டுப், பின் மீண்டும் நீர்பாய்ச்சுவதனால் எவ்வளவு உயர்ந்த பலன் கிடைக்கும் என்று அறியப் பட்டிருப்பதை அன்றே தெரிந்து ,குறள் வாயிலாகச் சொன்னதாகும். அதே போன்று,

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று சொன்னது, பயிர் செய்யும் நிலத்திற்கு உழுவதையும் எரு இடுவதையும், களைபெடுப்பதையும், நீர் பாய்ச்சுவதையும், தவிர ஐந்தாவதாகக், காப்பு, என்ற முறையில் பாதுகாப்புச் செய்வது, அதாவது எலிகள், பூச்சிகள், மற்றும் நோய்கள் காரணமாகப் பயிர்கள் சேதப்படாவண்ணம் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கத்தோடு தான் என்பது தெளிவாகிறது. அன்றி இறுதியாக,

"இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்"

என்று சொல்லும்போது எப்படி இன்று நம் மக்கள் நமது நிலங்கள் பலவற்றைத் தரிசாகப் போட்டு அதற்குத் தங்கள்வசதியின்மையைச் சாக்கிட்டுச் சொல்லுகின்றனர் என்று பார்க்கும்

போது அந்த நிலையை உணர்ந்து தான் தெய்வப்புலவர் அன்றே தீர்க்க தரிசனமாக எச்சரிகை செய்தது போல் இருக்கின்றது.

9. இப்படியாக வாழ்க்கையில் முக்கியமான எந்தத் துறையை நோக்கினும் வள்ளுவத்தில் அதற்கு உரிய உயர்ந்த உண்மையான கருத்துக்களும், போதனைகளும், இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கும் ஒத்த முறையிலே காணப்படுவன தாம் வள்ளுவத்தின் ஒப்பற்ற மகத்துவம். உலகப் புகழ் பெற்ற செருமன் தத்துவ ஞானியான ஆல்பர்ட் சுவைட்சர் என்பவர் திருக்குறளை நன்கு கற்று ஆராய்ந்து, குறள்வழி அன்புநெறி என்றும், மக்கள் சேவையின் மூலம் இறைவனை அடையும் வழி என்றும், குறளாசிரியர் கொள்கை "உலகம் உண்மையானது, மாயை அன்று" என்பதைத் தெளிவாக்குகிறது என்றும், தமிழ் மக்களும் புதிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில் விளக்கினர். உண்மை தான். வான்புகழ் வள்ளுவரின் பொதுமறை நூல் மக்கள் வாழ்க்கையின் உண்மைகளை அடிப்படையில் ஆராய்ந்து, ஒவ்வொரு துறையிலும் சிறப்புற வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, "வையத்தில் வாழ்வாங்கு வாழ" அவசியமான நீதிகளையும் நியதிகளையும் கவிச்சுவையோடு சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலால், அதனை "வாழ்க்கை நூல்", "பொருளுரை" "தமிழ் வேதம்" என்றெல்லாம் போற்றி அழைக்கின்றோம். கி. மு. 31-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் தவப்பயனாகத் தோன்றிய ஒரு மகானின் எண்ண எழுச்சியின் வரிவடிவாகவும், எழிலுருவாகவும், சொல்லோவியமாகவும் தீட்டப்பட்டதே வள்ளுவர் தந்த திருக்குறள். பண்டைத் தமிழருக்கு முப்பாலில் நாற்பொருள் கூறிய இந்நூலே இன்றும் நாம் விரும்பும் புது வாழ்விற்கு ஒரு ஈடற்ற அடிப்படையாகவும் வரைபடமாகவும், அணிகலனாகவும் அமைகிறது என்பதில் ஐயமேயில்லை.

இருவகைக் கற்பனைகள்

மு. வை. அரவிந்தன்,
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

"பொய் பிறந்தது புலவர் வாயிலே" என்பது ஒரு பழமொழி. கவிஞன் வீண் கற்பனைகளில் மூழ்கிக் காலங் கழிப்பவன் என்றும், இந்த உலகையும் சூழ்நிலையையும் மறந்துவிட்டுக் கற்பனை உலகில் மனக்கோட்டை கட்டிக்கொண்டு உலவுபவன் என்றும் பலர் நினைக்கின்றனர். கற்பனையில் திளைக்கும் புலவனின் எண்ணமும் எழுத்தும் நாட்டைச் சீர்திருத்தா – மக்களின் வாழ்க்கையை உயர்த்தா என்றும் சிலர் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதிலும் நினைப்பதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது.

கற்பனைகளில் பொருந்து கற்பனை உண்டு; பொருந்தாக் கற்பனை உண்டு. பொருந்து கற்பனை பயன் தருவது; மக்கள் எண்ணத்தை உயர்த்த வல்லது; எண்ணத்தை உயர்த்தி வாழ்க்கையை வளம்படுத்துவது. பொருந்தாக் கற்பனையால் பயன் இல்லை. பொருந்தாக் கற்பனை கேட்பவர்களுக்குக் களிப் பூட்டுகிறது; மயக்கம் தருகிறது.

பொருந்து கற்பனை எது? பொருந்தாக் கற்பனை எது? இப்பொருள் இவ்வாறு இருந்தால் - இந்த நிகழ்ச்சி இவ்வாறு நிகழ்ந்திருந்தால் நன்றாய் இருக்கும் என்று எண்ணுவது பொருந்து கற்பனை. பலவிடங்களில் கண்ட காட்சியை - ஓரிடத்தில் அமைத்துக் காட்டுவது உண்மைக் கற்பனை. பலருடைய வாழ்க்கையில் – பலவிடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஒருவர் வாழ்க்கையில் – ஓரிடத்தில் நிகழ்ந்ததாகக் கூறுவது மெய்க் கற்பனை பொருந்து கற்பனை நிகழக் கூடியது. பொருந்தாக் கற்பனை என்றும் எவ்விடத்தும் நிகழாதது.

"இடியுமிழ் பிரங்கிய விரவுபெயல் நடுநாள்
கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்

பிடியொடு மேயும் செய்புன் யானை
அடிஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இருஅல் துணைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலை" (குறிஞ். கலி. 5)

என்று மலைவளத்தைக் கபிலர் கூறியிருப்பது பொருந்து கற்பனை;

"குழுமேதி இறங்கும் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை,
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவிருந் துக்கு உபசரிப் போர்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்த்ர சூடர்தென் ஆரிய நாடே"

— குற்றாலக் குறவஞ்சி · நாட்டுவளம்

என்று பிற்காலப் புலவர் ஒருவர் நாட்டுவளம் பாடியிருப்பது பொருந்தாக் கற்பனை. பொருந்து கற்பனைகளைச் சங்க இலக்கியங்களில் காணலாம். பிற்கால நூல்களில் அத்தகைய பொருந்து கற்பனைகள் இடம் பெறவில்லை. பிற்காலப் புலவர்களில் பலர் கருத்துச் சிறப்பைக் கருதாமல், கற்போர்க்கு வியப்பும், களிப்பும் உண்டாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டனர். அதையே சிறந்த புலமை என்றும் கருதினர்.

பிற்கால இலக்கியங்களில் ஒன்றான கலிங்கத்துப் பரணி நூலிலும் கற்போர்க்கு வியப்பும், களிப்பும் ஊட்டும் கற்பனைகள் பல உள்ளன.

பாலை நிலத்தின் வெம்மையை உயர்வு நவிற்சியாய்க் கூறுகின்றார் புலவர் :

''அணிகொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்கு அப்பாலை
மணலொன்று காணாமல் வரையெடுத்து மயங்கினவே''

''அப்பாலை நிலத்தின் மணல் ஒன்றைக் கடலில் இட்டால் உடனே கடல் நீரெல்லாம் சுவறிப்போகும். இந்த உண்மையை அறியாமல், இராமன் ஏவிய வானரப் படைகள் கடலைக் கடக்க அணைகட்டின; மலைகளைச் சுமந்து வருந்தின''.

இத்தகைய கற்பனைகள் பல பிற்கால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

ஐயுணர்வு

—*—

இரா. பன்னீர் செல்வம், எம்.ஏ.,
திருவனந்தபுரம்.

அன்பின் ஐந்திணையின் தோற்றம் காட்சி, ஐயம், தெளிதல் என்ற முறையில் அமைந்துள்ளது. ஆடவன் - தலைவன் ஓர் உருவத்தைக் காண்கின்றான்; அது மரமா? மனித உருவமா? என்றோ, அல்லது அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை மாதர்கொல்? என்றோ மயங்குகின்றான். இவ்வாறு ஐயம் நிகழ்ந்த பின்னர்ப், பலவகையான ஏதுக்களாலும் அதுதெளியப் படுகின்றது. தெளிவு ஏற்படுவதற்கு முன்னதாக - மூலமாக அமைந்தது, அமைவது ஐயம். தண்ணீர் தெளிந்தது என்னுமிடத்து முன்பு கலங்கியிருந்தது என்பதை உணருகின்றோம். எனவே தெளிதல் என்பதன் முதற்படியாக அமைவது ஐயம் என்று நாம் அறிகின்றோம்.

இதே அடிப்படையில், சித்தாந்த அமைப்பிலும் மூவகை நிலையினைக் காணலாம். அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பன. இவற்றை ரூபம், தரிசனம், சுத்தி என்று கூறுவர் இம்மூன்றினையும் மேல் விளக்கப் பெற்ற காட்சி, ஐயம், தெளிதல் களுடன் ஒப்பிட்டுப்பார்ப்போம். காட்சியும் கேட்டலும் புலனிலைகள் பின்னிரண்டும் அவற்றின் முடிவுகள்.

மேல், எவ்வாறு ஐயம், தெளிதலுக்குக் காரணமாக அமைந்ததோ அதேபோன்று இங்கும் சிந்தித்தல் தெளிதலுக்குக் காரணமாக அமைகின்றது. சிந்தித்தலாவது ஒன்றின் உண்மை, இன்மைகளை ஆராய்வதாகும். எனவே, ஐயப் படுதலும், சிந்தித்தலும் உள்ளத்தின்கண் நிகழும் நிகழ்ச்சிகளாகின்றன. இவ்வுள்ள நிகழ்ச்சியின் பயன்தான் தெளிதல்.

தெளிவுபடுதற்கு முன் மனம் எந்நிலையில் இருந்தது? கலங்கி - மயங்கி - சிந்தித்த - ஐயமுற்ற நிலையில் இருந்தது இவ்வாறுன

நிலைகளின் பயன் இறுதியில் தெளிவுபடுதல்; உண்மை இது எனத் தெளிதல். அவ்வாறன்றி நிர்வாணமான உள்ளம் தெளிதல் இல்லை. கலக்கம் தோன்றினுல் அன்றோ தெளிதலும் இருக்கும்? அறிஞர் இல்லை; ஏனெனின் அசடர்கள் இல்லை, செல்வர் இல்லை ஏனெனின் வறிஞர் இல்லை என்ற கூற்று ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

இந்த நிலையில், வள்ளுவர் கூறிய

''ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு''

என்ற குறளை ஆராய்வோம். கடவுள் உண்டோ? இல்லையோ? என்பன போன்ற பல ஐயப்பாடுகள் தோன்றுவன இயல்பு. அவ்வாறு தோன்றுகின்ற ஐயப்பாடுகளைப் பிரமாணங்களாலும், ஏதுக்களாலும் ஆராய்ந்து சிந்தித்துத் தெளிதலே பயனாகும். அவ்வாறு ஐயம் தோன்றிக் கடா விடைகளாலும், ஏதுக்களாலும் காட்டுக்களாலும் தெளிவடைகின்றேம். அவ்வாறு தெளிதற்கு முதற் படியாக இருக்கும் ஐயம் தெளியக் காரணம் ஒன்று வேண்டியிருக்கின்றது. அதுதான் மெய்யுணர்வு; அல்லது ஞானம். எவ்வாறு உள்ளம் காட்டக் கண் காண்கிற்தோ அவ்வாறே ஞானம் நிகழ ஐயமும் தெளியப்படுகிறது. இதைக் 'கண்டு காட்டலின்' என்ருர் மெய்கண்டார். உள்ளம் கருதுகின்றது; கண் காண்கின்றது – காட்டப்படுகின்றது. கண்ணின் காரியத்துக்கு உள்ளம் காரணமாக அமைகின்றது. எனவே உள்ளத்து உணர்வும் கட்பொறியின் செயலும் ஒருங்கியைந்து வினைமுடிக்கின்றன. அவ்வாறு உள்ளம் என்பது ஒன்று இல்லையாயின் கண் காணுதல் இல்லை. கண்களை மூடிய போது உள்ளம் காணலைச் செய்கின்றது.

அதுபோலவேதான், ஐயம் தோன்றிய போதிலும்அவ்வையத்தைத் தெளிவிக்கும் ஆற்றலான ஞானம் – மெய்யுணர்ச்சிநிலை இருத்தல்வேண்டும். அதனுல் தான் மெய்கண்டார் தம் சிவஞான போதத்தில்,

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு

ஆங்கு

அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே''

என்று அழகுறக் கூறினார். இறைவன் ஆசானாக வந்து, தன்னை யார் என்று அறியாது மதிமயங்கி, வேடர் குழாத்துப்பட்டு வாழ்ந்த ஓர் இளவரசனை, 'நீ இததன்மையை' என்று உணர்த்தித் தெளிவித்துச் செல்கின்றான். இத்தகையதோர் தெளிவு ஏற்படுதற்குமுன் அவன் மயங்கிய நிலையிலேயே இருக்கிறான். அவனுக்குத் தான் அரசனோ வேடனோ என்ற ஐயம் ஒருகால் நிகழ்ந்திருந்தாலும் கூட அது தெளிவிக்கும் ஞானகுரு இல்லையெனின் யாது பயனும் உண்டாயிருக்காது அன்றோ?

திருவள்ளுவரும், இந்நிலையினை உணர்ந்துதான் மெய்யுணர்வில் அச்செய்யுளினை அமைத்துள்ளார். 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில் மனம் மயக்கமடைந்த நிலையினையே கூறுகின்றார்: 'பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும்', 'இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறுகாட்சியவர்க்கு', 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, என வருகின்ற பாடல்கள் ஐயப்பாட்டுள்ள நிகழ்ச்சியினையேஎடுத்தோதி, அது தெளிதற்கு வழியும்,தெளிந்த வழிப் பிறக்கும் இன்பத்தையுமே சிறப்பிக்கின்றன.

எனவே, இது நன்று; அது தீது எனப் பிரித்துணரவைக்கும் ஞானம் - மெய்யுணர்வு இல்லையெனின் அவ்வாறான ஐயப்பாடுற்ற நிலை தோன்றிய வழியும் யாதுபயனும் இல்லை என்க. என்னை? அறிவுடையமாணாக்கன் தான் கற்பவற்றில் ஐயங்கள் இருப்பதை – தெளிவில்லாத பகுதிகள் இருப்பதை உணர்வான். ஆயினும் அவற்றைத் தெளிவுபடுத்த ஓர் ஆசிரியன் இல்லையெனின் அவ்வையங்கள் தோன்றியும் அவனுக்குப் பயனின்றிப் போகின்றது அதுபோலவே ஐயவுணர்வு தோன்றியவழியும் அது தீர்தற்குக் காரணமாய மெய்யுணர்வு இல்லெனின் ஓர் பயனும் விளையாதென்க.

ஆகவே, மெய்யுணர்வின் துணைக்கொண்டு தெளிதற்கு ஐயம் அடிநிலையாக இருப்பதை உணர்கின்றோம். படிப்படியாக முத்தி நிலை, ஞானநிலையினைக் குறிக்க வந்த சேக்கிழார் பெருமானும் 'பெருத சோபானம் ஏறி' என்று கண்ணப்பர் மலை ஏறிய காட்சியைக் கூறுகின்றார்.

இனி ஐயுணர்வு என்பதற்கு ஐம்புலன் உணர்வு என்று பொருள் கூறுதற்கு இவ்வதிகாரத்தில் இடமின்மையும் உணர்தல் வேண்டும். ஐம்புலன் உணர்வுகளைப்பற்றிய செய்திகளை 'நீத்தார் பெருமையில்' பரக்கக் கூறியுள்ளார். 'உரன் என்னுந் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்', 'ஐந்தவித்தான் ஆற்றல்', 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை' என்றும் கடவுள் வாழ்த்தில் 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' என்றும் பாடியுள்ளமை காண்க இவையெல்லாம் ஐம்புலன் அடக்கத்தை யும், அவற்றை அடக்கினுன் ஆற்றலையும், அவற்றின் வகையினை அறிவான்கண் உலகம் படும் என்பதையும் கூறுகின்றன. எனவே மெய்யுணர்தல் அதிகாரத்தில் மீண்டும் கூறுதலால் விளையும் பயன் ஒன்றுமில்லை. இக்குறள் அமைந்த இடமும் அத்தகையது அன்று. இதற்கு முந்தின குறள் 'ஐயத்தின் நீங்கித் தெளிந் தார்க்கு' என்று வரும் பாடலாகும். எனவே பொருட்டொடர்பு கருதி நோக்கின் ஐயுணர்வு என்பது ஐயஉணர்வினைக்குறிக் கின்றது என்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

இவ்வாருன மயக்கங்கள் தோன்றுமெனக் கருதித்தான், வள்ளுவரும் புலன்களைக் குறிக்குமிடத்து 'ஐந்து, ஓர் ஐந்து' என்றும், ஐயப்பாட்டினைக் குறிக்குமிடத்து 'ஐ, ஐயம்' என்றும் ஓதினர் போலும்.

நகை

—●—

புலவர், திருமேனி. நாகராசன்.
(தமிழாசிரியர், காரைக்கால்)

முன்னுரை

1. "மெய்ப்பாடெட்டுவகைப்படும் அவை: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. இதனை,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தானறிக.

நகை இன்னதென்பது

மெய்ப்பாடெட்டனுள் நகையை முன்மொழிந்தார். என்னை, அதன் தலைமையும், இன்றியமையாமையும் நோக்கியென்க. நகைக்கு மறுதலை அழுகை. உலகஉயிர்களனைத்தும்நகையைவேண்டுவதல்லது அழுகையைவேண்டாமையின் சிறப்புநோக்கி அதனை முற்படமொழிந்தாரெனினும் அமையும். நகையாவதுயாதெனில், "நகைபடுபொருள் கண்டவழி முறுவலோடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகையாவது" என்பர் உரையாசிரியர். நகை, சிரிப்பு என்பன ஒரு பொருட்கிளவி. நகையெனினும் சிரிப்பெனினும் ஒக்கும், அஃது இகழ்ச்சியிற் பிறப்பது. பிறர் இகழ்ச்சி கண்டு தான் நகுதலும், பிறர் தன் இகழ்ச்சி கண்டவிடத்துத் தான் நகுதலும் என விருவகைத்து.

நகைப்பொருள்கள்

நகைக்குரியபொருள்கள் நான்காம். அவை: எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்பன. என்னை,

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப"

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலறிக.

எள்ளல்: எள்ளலாவது இகழ்தற்குறிப்பு. அஃது தான் பிறரை இகழ்ந்து நகுதலும், பிறரால் இகழப் பட்டுழித்தான் நகுதலும் என இருவகைத்து.

"ஆரியர் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணும் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணும் செவிடர் கண்ணும்"

(செயிற்றிய நூற்பா)

எள்ளல் பொருளாக நகை தோன்றும்.

இளமை: இளமையாவது குழந்தைத் தன்மை. அஃது தான் பிறர் இளமை கண்டு நகுதலும், தன் இளமையான் தான் பிறரை நகுதலும் என இரண்டு. குழவி கூறும் மழலைக்கண் இளமைப் பொருளாக நகை தோன்றும்.

பேதைமை: பேதைமையாவது அறிவின்மை. அஃது தான் பிறர் பேதைமைகண்டு நகுதலும், பிறரால் தன் பேதைமை கண்டுழித்தான் நகுதலும் என இரண்டு.

"கவற்சி பெரிதுற் றுரைப்போர் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணும்
சுற்றத் தோரை இகழ்ச்சிக் கண்ணும்"

(செயிற்றிய நூற்பா)

பேதைமைப் பொருளாக நகை தோன்றும்.

மடன்: மடனாவது பொருண்மை அறியாது திரியக்கோடல், அஃது தான் பிறர் மடங்கண்டு நகுதலும், பிறரால் தன் மடமை வெளிப்பட்டுழித்தான் நகுதலும் என இருவகைத்தே. மடவோர் சொல்லும் சொல்லின் கண்ணும் மடமைப்பொருளாக நகை தோன்றும்.

எள்ளல் வழி நகை

மன்னவன் கோயிலில் அடியோர் அளப்பரியரே. அவருள் குறளனும் கூனியும் ஓர் சார்பினரே. அக்குறளனும் கூனியும் ஒரு நாள் ஒருவரையொருவர் எள்ளி நகைத்துக் கொண்டனர். என்னை, அவ்வொருவர் தோற்றமும் ஒவ்வொருவருக்கு எள்ளற் கேதுவாக அமைந்திருந்த தாதலின். குறளனும் கூனியும் தம் முள் முறையே எள்ளிக்கொண்டவாறு காண்க:-

"நீருள் நிழல் நுடங்கினாற் போல நுடங்கிய மென்சாயலோடே ஈண்டு உடலிலே கூன் புறப்பட்டு நடக்கின்றவளே! உன்னை ஒன்று உசாவுவேன். நான் உன்னை உசாவுதற்கு நீ என் நோற்றனையோ? ஈங்கே நிற்பாயாக"

"காணுதற்கியலாத குறளாய்ப் பிறப்பதற்குக் கரணியமான நாழிகையின்கண் ஆண்டலைக்குப்பெடை ஈன்ற பறழான மகனே! நீ என்னை விரும்பித் தடுத்தனை. உன் போல் குறளர் என்னைத் தீண்டத்தக்கர்கொல்?"

"கலப்பை இற்றைக்கும் படைவாள் போல ஓரிடம் முடங்கியும் ஓரிடம் மடங்கியும் முறித்து விட்டாற் போன்ற நிறைந்த அழகால் எனக்கு ஆற்றலாகாக் காமநோயைச் செய்தாய். நான் பொறேன், நீ நல்கின் என்னுயிர் உளதாகும்."

"நெஞ்சே! இவன் மனக்குறிப்புக்காண். நெத்துப் பலகை எடுத்து நிறுத்தினாற் போன்ற கல்லாக்குறளா! நண்பகல் வேளை வந்து என் கரந்தோட்டு இல்லத்து வாவென சொல்லுதற்கு ஏடா! உன் பெண்டிராய் இருப்பர் சிலருளரோ கூறு".

"நல்லாய்! கொக்கை உரித்தாற்போன்ற வளைந்த மடுப்பை யுடையாய்! கேள்; நின்னையான் மார்பினில் புல்லின் என் நெஞ்சில் அக்கூன் ஊன்றும்; புறத்தில் புல்லின் அக்குளுக் காட்டுதலை உடைத்து. ஆதலின், பக்கத்தே முயங்கும்படி வருக"

"ஓ கெட்ட தன்மை யுடையனே! அகன்றுபோ. மக்களுள் பாதி யானவனே! திரண்ட மரக்கிளையைச் சுற்றிப் படர்ந்த பூங்கொடி

போலக் கூறுதல் வடிவொத்தல் இல்லாயாக்கையைத் தழுவி எம்மைப் புரப்போம் என்பாரும் பலரே. இப்பரத்தைமை உடையவன், பக்கத்தைப் புல்லுதலைத் தாராய் என்று கூறி நிற்பான். குறுவட்டா! நின் குறளினும் கூன் சாதியின் பிறப்பு இழிந்ததோ''

''யான் அவளை விரும்புகின்றேனென அவள் பின் தொடர்தலை விரும்பாக்கூனி நுடங்கும் நுடக்கத்தை நெஞ்சே! நீ காண்''.

''யாமையை யெடுத்து நிறுத்தினாற் போலும் தோளிரண் டையும்விலாவுக்குஉள்ளே வீசி, யான் வேண்டேன் என்று விலக் கவும் என்னை விரும்பி வரும் காமனார் நடக்கும் நடையை நெஞ்சே! நீ பார்''.

''காதற்கணையுடைய சாமனார் உடன் பிறந்தாராகிய காமனார் நடையைக் கூனி! நீ காண்க''.

''ஓ! இவன்றன் நடையை நெஞ்சே! காண்''.

''நம்முள்கூடி உவப்பதற்குக்குறியிடம் குறிப்போம்; இனி உன்னை இகழ்ந்து கூறுமைக்கு அரசன் அடியைத் தொட்டுச் சூளுற்றேன்''.

''மென்மையான மார்பினனே! யானும் உன்னை இகழ்ந்து கூறுதலைத் தவிர்ந்தேன். இவ்வரண்மனையின்கண் நம்மைக் காண்போர் பேயும் பேயும் தள்ளினாற் போலும் இக்கூனியும் குறளனும் துள்ளலுற்றனரென நகுதலை விரும்பிற்றிலேன், பொற்றகடுபோலும் உருவினாய்! ஆதலின், இக்கோயிலின் நீங்காக் காவின்கண்புக்கு ஆண்டுயாம் இறுகப்புல்லுவோம்''. இதனை,

> ''என்னோற் றனைகொல்லோ
> நீருள் நிழற்போல் நுடங்கிய மென்சாயல்
> ஈங்குருச் சுருங்கி
> இயலுவாய் நின்னோ டுசாவுவேன் நின்றீத்தை:
> அன்னையோ, காண்டகை யில்லாக் குறள்நாழிப்
> போழ்தினான்

ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று;
மாண்ட, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிரையெரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ
நிறுக்கல்லேன்
நீநல்கி னுண்டென் னுயிர்;
குறிப்புக்காண்: வல்லுப் பலகை யெடுத்து
நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர்மன்னோ கூறு;
நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லின்
அக்குளுத்துப் புல்லலு மாற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது;
போசீத்தை, மக்கள் முரியெனீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை தழீஇயின ரெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமால் தொக்க
உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முற்றியாக்
கூனிகுழை யுங்குழைவு காண்;
யாமை யெடுத்து நிறுத்தற்றால் தோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவும் எம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க;
ஓஒகாண், நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முனும்
உசாவுவங் கோனடிதொட் டேன்;
ஆங்காக, சாயலின் மார்ப அடங்கினேன் ஏஎ

பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவல்
தண்டாத் தகடுருவ வேஞகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவேம்
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு''

(கலி: மருதம்: 29)

என்னுங் கலித்தொகைப் பாட்டால் அறிக. இப்பாடல் எள்ளல் வழிநகை தோன்றியதற்குக் காட்டாம்.

இளமை வழி நகை

''பல் வகைப் பேறும் பெற்றுப் பலரோடு குழூஇ உண்ணும் மிக்க பெருஞ் செல்வராயினும் மெல்ல மெல்லச் சிறுகச் சிறுக நடந்து சிறிய கரத்தினை நீட்டி நெய்யுடைச் சோற்றை இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழாவியும் அதனை உடலெங்கணும் சிதறியும் இன்னவாறு எல்லாம் களிப்பு மிகும் விளையாடல் ஆடித் தன்னை ஈன்றூர்க்கு இன்ப மயக்க மளிக்க வல்ல மக்களை இல்லோர்க்கு வாழ்நாளெல்லாம் பாழ்நாளேயாம்'' என்றனன் அருந்திறல் ஆற்றல்சேர் அறிவுடைநம்பி. அப் பாண்டிய வேந்தற்கு இளமைப் பொருளாக நகை தோன்றியவாறறிக. என்னை,

''படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மகக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே'' (புறம்.188)

என்பது அவ்வரசன் மொழிந்த புறப்பாட்டாதலின். இஃது இளமைவழி நகை தோன்றியதற்குச் சான்றும்.

பேதைமை வழி நகை

பத்துவகைப் பண்பும் பாங்குறக் கொண்ட தலைவி, தன் பாங்கியை விளித்து, ''தோழி! மாலையை அணிந்த மார்பினில் வதுவை நாள் ஒப்பனையை யுடைய பரத்தையரைப் புணர்க்க

விருப்புடன்வந்த பாணனொருவன் தெருவில் புனிற்று தன்னை நோக்கிப்பாய்ந்தமையிற் கலங்கித்தன் யாழினைக் கைவிகந்து, எம் இல்லின்கண் புக்கனன். அதுகண்டு உடல் குலுங்க எழுந்த நகையை மறைத்தவாறு அவனெதிர் சென்று உம்மனை இஃதன்று அஃதாம் என்று புகன்று நின்ற என்னையும் தன்னையும் கூர்ந்து, பார்த்து மயங்கிய நெஞ்சத்தினனாய் இரு கைகூப்பி என்னைத் தொழுது நின்ற அவனது நிலையை நினைக்கின் நகை மிக விளைப் பதாகின்றது" எனப்பரத்தை மனை நாடிச்சென்ற பாணன் புனிற்றுவால் அஞ்சித்தன்மனை புகுந்த அவன்றன் பேதைமை எண்ணி நகைத்து நின்றாளென்க. ஈண்டுத் தலைவிக்குப் பாணனின் பேதைமைப் பொருளாக நகை தோன்றியது. இதனை,

"............ ....
தண்டுறை யூரன் திண்டார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந் தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றிம்மனை அன்றஃ தும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினேன் தொழுதுநின் றதுவே"

(அகம். 56)

எனக்கூறி "நகையாகின்ற தோழி" என்றமையின் தலைவிக்குப் பேதைமை பற்றி நகை தோன்றியதென்க.

மடன் வழி நகை

தோழி, தலைவியைத் தலைவன்பால் உய்த்தற்பொருட்டு உடன் கொண்டு வருவதாக விளித்துப் போகத் தலைவன் அவள் சொல் நம்பிக் காட்டிடைக் காத்து நின்றனன். வறிதே காலம் நீட்டித்தமையின் தன் நெஞ்சை நோக்கித் தலைவன் விளம்பலுற்றான்: "நெஞ்சே! மிக்க காய்தலையுடைய கோடையின் மிகநீண்ட வழியில் நானும் தன் வறுமை மிகச்சிறிய குளத்தின்கண் தோண்டப் பெற்ற குழியின் பக்கத்தில்

உண்ணற்குதவாத கலங்கல் நீரால் கன்றையுடைய மடப்பிடியின் தலையைக் கழுவி, சேறு கொண்டாடினமையின் நிறம் மாறுபட்ட வயக் களிறு கொத்துக்கள் அசையத் துதிக்கையால் பற்றித் தன் முதுகினை உராய்ந்து கொண்டதான வழி மருகுள்ள வெண்கடம்பின் சுருங்கிய நிழலிலே தங்கிநம்முடன் பெரிய மென்மைத் தோளினளாகிய தலைவி வருவாள் என்ப. நாம் நகை மிசையுடையோம்''. ஈண்டுத் தலைவனின் நகைபடு பொருளாயிற்றென்க. இதனை,

''நாம்நகை யுடையம் நெஞ்சே கடுந்தெறல்
வேனில் நீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூரிய மண்ணீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வாலிணர் தயங்கத் தீண்டிச்
சொரிபுறம் உரிஞிய நெறியயல் மராஅத்து
அல்குறு வரிநிழல் அசைஇ நம்மொடு
தான்வரும் என்ப தடமென் தோளி
....''(அகம் .121)

என்னும் நெடுந்தொகைப் பாட்டான் நேரிதினறிக. இப் பாடல், மடன் வழி நகை தோன்று மென்றற்குக்காட்டு.

முடிவுரை

நகை, எண்வகைச் சுவையுள் இன்றியமையா முதன்மைச் சுவை ஆகும்; மாந்தர் அனைவரும் ஒருதலையாய் வேண்டுவதும் கைக் கொள்ளற்குரியதுமாம். நகைச் சுவை மனப் பான்மை இன்றேல் சமுதாய வாழ்வு வெறுமையாய்ப் போய் முடியும். இன்புறுங்காலத்து நகைத்தல் இயல்பும் எளியதுமாகும். இனித் துன்புறுங் காலத்தும் நகைத்தல்வேண்டும். என்னை.

''இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்''

என்பது வள்ளுவர் வாய்மொழியாதலின். எனவே நாளும் நகையை நாடி நல்வாழ்வு நாடுவோமாக.

திருக்குறளும் வழக்குத்துறைக் கருத்தும்

பி. அரங்கசாமிநாயுடு பி. ஏ., பி. எல்.,
முன்னாள் மாவட்ட நடுவர், மதுரை.

"திருவள்ளுவர் வாழ்ந்த காலம் எனப்படும் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பு, வழக்குத்துறை எவ்விதம் இருந்தது?" என்பதைப் பற்றித் திருக்குறளில் விளக்கப் பட்டுள்ளதா என்ற பொருள் பற்றி எனக்குத் தென்படுகிற கருத்துக்களைக் கீழே விளக்கியுள்ளேன்.

திருக்குறளில், அறம், நல்லொழுக்கம் ஆகியவற்றையும், பிறர்பொருளை இச்சிக்காமல் இருக்க வேண்டுமென்பதையும், இன்னும் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் வள்ளுவர் சொல்லியிருப்பதைப் பார்க்குங்கால், அவரது காலத்திலும் தகராறுகள், சச்சரவுகள் இருந்திருக்கவேண்டும் என்பது நன்கு தெரிகிறது.

வழக்குகள் தீர்க்கும் குழுவைப்பற்றித் தெளிவாக அவர் சொல்லாவிடினும், அக்காலத்திலும் தற்காலத்திலிருக்கும் பஞ்சாயத்தைப் போன்று, வழக்குகள் தீர்க்கும், நிறுவனங்கள் இருந்திருக்க வேண்டுமென அறியலாம்.

அரசியலைப்பற்றியும், அரசனின் பண்புகளைப்பற்றியும் அவர் கூறுவன ஊன்றி நோக்குங்கால் அரசரால் ஏற்படுத்தப் பட்டிருந்த குழுக்களால், வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரியவருகிறது.

ஆனால் "இப்பொழுது இருப்பது போல, எல்லாக்காரியங்களுக்கும் சட்டதிட்டங்கள் அக்காலத்திலிருந்தனவா?" என்னும் வினா எழுகிறது. "சொத்து பற்றியும், குற்றங்கள் பற்றியும் வெகுகாலமாய் வழக்குகள் இருந்திருக்க வேண்டுமென்பது" மன்னர்கள் குற்றம் செய்தவரைத் தண்டித்தும்,

நீதிக்குப் புறம்பாகச் சொத்துக்கவரப்படுவதைத் தடை செய்தும், வர்தமையினின்று, நமக்கு ஒருவாறு தெரியவருகிறது.

திருக்குறளின் 12வது அதிகாரமான "நடுவுநிலைமை"யில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய நடுநிலைமை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதிலும் சிறப்பாக, வழக்குகளில் தொடர்புடையவர்கள் நடுநிலைமையினின்று தவறவேகூடாது.

நடுநிலைமை உடையோனின் செல்வம், அழியாமல் அவனுடைய பின்னோர்க்கும் பயன் படுவதாகும். இந்த அதிகாரத்தில், 114-வது குறளில் "ஒருவன், நடுநிலைமை உடையவனா அல்லது இல்லாதவனா என்பது அவனுக்கு நன்மக்கள் இருத்தலானும், இல்லாமையானும் தெரியவரும்!" என்கிறார். திருவள்ளுவர் காலத்தில், இப்பொருள், மனிதனின் ஒழுக்க முறையைக் குறிக்கலாயிற்று எனலாம் ஆனால் தற்காலத்தில் தலைசிறந்த ஒழுக்க முடையோரின் மக்கள் ஒழுக்கமின்றியும், ஒழுக்கமில்லாரின் மக்கள் ஒழுக்கத்துடனும் இருப்பதைக் காண்கிறோம். இதற்கு விரிவுரையாளர்கள் "எச்சம்" என்பதற்கு வேறு பொருள் உளது என்று கூறுவர். அவர்தம் கூற்றை ஒப்புக்கொண்டால் இக்கருத்து எக்காலத்திற்கும் உரியது. எச்சம் என்பதன் பொருள், ஒருவர் இறந்தபின் எஞ்சியிருப்பது அதாவது இறந்தவர் நல்லாராயின் புகழும், பொல்லாராயின் பழியும் காணப்படுவது. நடுநிலைமையுடனிருப்பவன் வறுமையில் ஆழ்ந்திருந்தாலும், உயர்ந்தோர் அதை வறுமையாகக்கருத மாட்டார்கள். ஒரு சீர் தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒருபக்கம் சாயாதிருப்பதே சான்றோர்க்கு அழகு. உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாக நடுவர் பெறின், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல், கண்கூடு. தற்காலத்தில் கருமை வாணிகம், (Black Market) என்று சொல்லப்படுகிறதைப்பற்றி வள்ளுவர் இவ்வதிகாரத்தின் 120-ஆம் குறளில் சொல்கிறார். வணிகனுக்குரிய கடமை பற்றிக் கூறும் பொழுது

திருவள்ளுவர், "பிறர் பொருளையும் தன்பொருள் போல் எண்ணிப் பிறருக்கு இழப்பு இன்றி வாணிகம் செய்வதே வணிகர்க்கு அழகு" என்றார்.

வெஃகாமை எனும் 18-வது அதிகாரத்தில், திருவள்ளுவர் அரிய கருத்துக்களைக் கூறியுள்ளார்:- "நடுநிலைமையின்றிப் பிறர்க்குரிய பொருளை, அடையவிரும்பினால் அவன் குடி கெட்டுக்குற்றமும் வந்து சேரும். அறநெறியால் நிலையான இன்பத்தை விரும்புபவர், நிலையில்லா இன்பத்தை விரும்பி, அறமில்லாதவற்றைச் செய்யார். ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லார், வறுமையில் வாடினாலும், அவ்வறுமையை அகற்றற் பொருட்டுப் பிறர் பொருளை நாடார். பலநூல்களைக் கற்றறிந்தவர்கள், பிறர்பொருள்களை அடைய விரும்பித் தீய செயல்களைச்செய்தால், அவர் கற்ற கல்வியின் பயன் என்ன? ஒன்றுமன்று! ஒருவர்தம் செல்வம் குறையாமலிருக்க விரும்பினால், அவர், நீதிக்குப்புறம்பாகப் பிறர் செல்வத்தை நாடுதல் கூடாது! பிறர்பொருளை நாடாதவரிடத்துத் திருமகள் தானே வந்தடைவாள்!"

திருவள்ளுவர் 'பயனில சொல்லாமை' எனும் அதிகாரத்தில் எந்தவிதமாகச் சொற்களைப் பயன் படுத்த வேண்டும்' என்ற பொருள்பற்றிக் கூறுகிறார்.

191-ஆம் குறளில், கேட்பவர் யாரும் வெறுக்கும் படியாகப் பயனிலாச் சொற்களைச் சொல்பவன் எல்லாராலும் இகழப்படுவான்' என்கிறார்.

"பலரின் முன்னிலையில் பயனிலாச் சொற்களைச் சொல்லுதல், ஒருவர்தம் நண்பரிடத்து அறமற்ற செயல்களைச் செய்வதைவிடத் தீயதாகும்" என்று அதற்கடுத்துவரும் குறளில் உரைக்கிறார். ஒருவன் பயனில்லாதவற்றைப்பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள் அவன் அறமில்லான் என்பதையே காட்டும். நற்பண்புடையோர் பயனிலாச் சொற்களைக் கூறினால், அவர்தம் மதிப்பும் நீங்கிவிடும். பயனிலாச் சொற்களைப் பலமுறை சொல்கிறவன் மனிதன் என்று மதிக்கப்படாமல் மக்களுள் பதர் எனக்கூறப்படுவான்.

அறமில்லாதவற்றைக்கூறினாலும், சான்றோர் பயனில்லாதவற்றைச் சொல்லாதிருப்பது அழகாகும். அருமையான பயன்களை ஆராயவல்ல அறிஞர், பயனில்லாச் சொற்களை ஒருபோதும் சொல்லார்! மாசற்ற அறிவுடையோர், மறந்தும் கூடப் பயனற்ற சொற்களைச் சொல்லார். சொற்களில் பயனுள்ளவற்றையே கூறல் வேண்டும்; பயனில்லாவற்றை ஒருபோதும் சொல்லக் கூடாது!''

வழக்குகளை எடுத்துரைப்போர்க்குச் சொல்வன்மை இருக்க வேண்டும், 641-ஆம் குறள் முதல் 650-ஆம் குறள் வரை சொல்வன்மைபற்றித் திருவள்ளுவர் விளக்குகிறார். ''நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வமாகும். அந்நா நலம் தனிச்சிறப்புடையது. ஆக்கமும் கேடும் சொல்கிற சொல்லால் வருதலால், ஒருவன், தன் சொல்லில் தவறுவராமற் காத்தல் வேண்டும். சொல்லும் போது, கேட்பவரைத்தன் வசப்படுத்தும் பண்புகளுடனும், கேட்காதவரும் கேட்க விரும்பும்படியும் கூறுவதே சொல்வன்மையாகும் சொல்லின் திறனறிந்து, சொல்லை வழங்க வேண்டும். அத்தகைய சொல் வன்மையைவிடச் சிறந்த அறமும், செல்வமும் வேறு இல்லை. பிறர்விரும்பும்படியாகத் தாம் சொல்லுதலும், பிறர் சொல்லும் சொற்களின் பயனை ஆய்தலும், சிறப்புடையோரின் குணங்களாகும். தம் கருத்தை நன்கெடுத்துச் சொல்லுங் காலத்தே, சோர்வில்லாதவனையும், அச்சமில்லாதவனையும் உள்ளோனை, மாறுபட்டால் வெல்லுதல் யார்க்கும் இயலாது. கருத்துக்களைச் செவ்வனே இணைத்து இனிமையாகச் சொல்லக் கூடிய வல்லவர்களிடம், உலகம் அவர்தம் ஏவல்களைச் செய்யும். தாம் கற்ற நூற்பொருள்களைப் பிறர்க்கு உணர்த்த இயலாதவர், மலர்ந்தும் மணமில்லா மலரைப் போன்றவர்''.

'வாய்மை' என்னும் அதிகாரத்தில் 291-ஆம் குறள் முதல் 300-ஆம் குறள் வரை வாய்மையின் அவசியம் பற்றித் திருவள்ளுவர் விளக்குகிறார். அவர், வாய்மை பற்றிப் பொதுவாகக் கூறினும், அது வழக்குகளுக்கும் பொருந்தும் என்றே கூறலாம். ''பிறர்க்குத் தீமை பயக்காத சொற்களை மொழியும் அறமே வாய்மையாகும். குற்றம் தீர்ந்த நன்மை பயக்குமாயின்,

பொய்ம்மையும் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறலாம். ஒருவர் தம் உள்ளம் அறிந்து, பொய் சொல்வாராயின், அவர்தம் நெஞ்சமே வருந்தி அழும். தன்மனத்தோடு பொருந்த உண்மையே மொழிபவன், தவத்தோடு தானமும் பெற்ற அறமுடையோனாகிறான். ஒருவனுக்குப் பொய்யில்லாமல் வாழ்தலைப் போல் புகழ்நிலை வேறு எதுவுமில்லை. அது அவனறியாமலே அவனுக்கு நலமளிக்கும். புறத்தூய்மை நீரினால் விளங்கும்: அகத்தூய்மை அவர்தம் வாய்மையால் விளங்கும். உலகின் ஒளிதரும் விளக்கெல்லாம் விளக்கல்ல; சான்றோர்க்கு அகத்திருள் நீக்கும் பொய்யாமை எனும் ஒளி விளக்கே, விளக்காகும்!,,

''திருவள்ளுவர் காலத்தில் வழக்கறிஞர்களாவது வழக்குரைப்போர்களாவது இருந்தனரா?'' என்ற வினா எழுகிறது. அவர்காலத்தில் வழக்குகளை எடுத்துரைக்கும் தனி மனிதர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அவர் காலத்தில், அரசியலில், ஒரு நாட்டின் வழக்குகளை மற்ற நாடுகளுக்கு எடுத்துரைக்கும் தூதுவர்கள் இருந்தனர் என்று கூறலாம்! வழக்குரைப்போரின் பண்புகள் பற்றித் 'தூது' எனும் அதிகாரத்தில் விளக்குகிறார். அவ்விளக்கங்கள் தற்காலத்தில், வழக்குரைப்போர்க்கும் பொருந்தும் என்றே கூறலாம். ''அன்பு, அறிவு, ஆய்ந்து சொல்லும் சொற்றிறன் ஆகிய மூன்றும் வழக்குரைப்போர்க்கு இன்றியமையாதனவாகும். இயற்கை அறிவு, விரும்பத்தக்க தோற்றம், ஆராய்ச்சியுடைய கண்கள், ஆகிய இம்மூன்றும் வழக்குரைப்போர்க்குத் தேவையாகும். பலவற்றைத் தொகுத்துச் சொல்வதும், அவற்றுள் பயனற்றவற்றை நீக்குவதும், கேட்பவர் மகிழும்படி கூறுவதும், தன்னை நியமித்தவரை மகிழ்விப்பதும், கற்பன கற்பதும், பிறரின் பகையான பார்வைக்கு அச்சமில்லாமல் இருப்பதும், உள்ளத்தில் பதியுமாறு காலத்திற்குப் பொருத்தமானவற்றை உரைப்பதும் ஆகியன உடையவன் காலத்துக்குப் பொருந்திய வழக்குரைப்போனாகிறான்!''

இங்ஙனம் திருக்குறளை நன்கு சிந்தித்துப் பார்க்கும் போது, வழக்குத்துறை பற்றிய கருத்துக்களும் அதில் இடம் பெற்றுள்ளன அறிந்து இன்புறலாம்!

மேற்கணக்கின் மேனூல் திருக்குறள்

(பண்டித வித்துவான் தி. சங்குப் புலவர், மதுரை,)

முன்னுரை

தெய்வப் புலமைத் திருவள்ளுவரியற்றிய திருக்குறள் என்னும் சீரிய நூலை மேற்கணக்கு நூல்களுள் ஒன்ருக வைத்தெண்ணுமல் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருகக் காட்டி வந்தனர் இன்று வரை. அந்நூலை மேற்கணக்கினு மேனூலாக வைத்தெண்ணுவதே பொருத்தமாம். அங்ஙனம் எண்ணுதற் குரியமுறைகுறித்து ஆய்வாம்.

மேற்கணக்கு, கீழ்க்கணக்கு

பண்டைக் காலப் பாவலர் சங்கத் தமிழ் நூல்களை மேற்கணக்கு எனவும் கீழ்க்கணக்கு எனவும் இருவகையாகப் பகுத்தனர். அவ்வாறு பகுத்தற்கு இலக்கணமும் எடுத்துக் காட்டினர். பன்னிரு பாட்டியலில் 'கணக்கு நூல்கட்கு இலக்கணம் "மேற்கணக்கெனவுங் கீழ்க்கணக்கெனவும், பாற்படுவகையாற் பகர்ந்தனர் கொளலே" (222) "அகவலும் கலிப்பா வும்பரிபாடலும், பதிற்றந்தாதி பதிற்றைம்ப தீரு, மிகுத்துடன் றெகுப்பது மேற்கணக்கெனவும், வெள்ளைத் தொகையுமவ்வகை யெண்பெறி, னெள்ளறு கீழ்க்கணக்கெனவுங் கொளலே" (223) என விளக்கங் கூறினர். அன்றியும் மேற்கோட்பாக்களாக "ஐம்பது முதலா வைந்நூறிரு, வைவகைப்பாவும் பொருணெறி மரபிற் றெகுக்கப் படுவது மேற்கணக்காகும் (132) எனவும், "அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி, யறம் பொருளின்ப மடுக்கி யவ்வகைத் திறம் பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்" (133) எனவும் காட்டினர்.

மேகற்ணக்கு

மேற் காட்டிய நூற்பாக்களால், "ஆசிரியப்பாவும் கலிப் பாவும் பரிபாடலும் ஆகிய மூன்று பாக்களால் ஐம்பது முதல்

ஐந்நூறு இறுதியாக அப்பாக்களை அடியளவின் மிகுத்து ஓரினமாக வமைத்து ஒரு பொருள்மேல் தொகுக்கப்படுவது மேற்கணக்காம் எனவும், ஐவகைப் பாக்களையும் ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியாக எப்பொருள் மேலாயினும் தொகுக்கப் படுவது மேற்கணக்காம்'' எனவும் விளங்கும்.

கீழ்க்கணக்கு

மேற் குறித்தபடி ஆய்ந்தால், ''வெண்பாக்களை ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியாகத் தொகுக்கப்படுவது கீழ்க்கணக்காம் எனவும், அடியுயர்வில்லாப் பாக்களை அறம் பொருள் இன்பம் என்ற பொருள்களை யடுக்கி ஐம்பது முதல் ஐந்நூறுவரை தொகுக்கப்படுவது கீழ்க்கணக்காம்'' எனவும் தோன்றும்.

தனிநூல் திருக்குறள்

இவ்விருவகைக் கணக்கிலக்கணமும் திருக்குறள் என்ற நூற்குப் பொருந்த முடைத்தோவெனின் இன்று என்பது நன்று விளங்கும். அறம் பொருள் இன்பம் என்ற முப்பால் வகுத்துக் குறட்பாவாற் செய்யப்பட்டதாகலின் கீழ்க் கணக்கி லக்கணம் சிறிது பொருந்திற்றெனினும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களமைத்து இயைத்தற்கு இலக்கணமின் மையால் கீழ்க் கணக்கினுட் சேர்ப்பதும் பொருத்த மின்றாம். ஒரு கணக்கிலும் சேராத ஒப்புயர்வற்ற தனிநூல் என்பதே பொருத்தமாம்.

திருக்குறட் சிறப்பு

நம் செந்தமிழ் மொழி இலக்கணங்களிற் பழமை வாய்ந்தது தொல்காப்பியம் ஆவதுபோல இலக்கியங்களிற் பழமையாக இன்று காணப்படுவது திருக்குறள் நூலே. பத்துப் பாட்டு எட்டுத் தொகை நூல்களுட் காணப்படும் பாக்களிற் சில திருக்குறட்கு முன்றோன்றினவாம் எனினும், அவற்றைத் தொகுத்த காலம் பிற்பட்டதே. ஆதலாற் றொன்மையுடையன வல்ல அவை. இந்நூற்கு முன்னூல் ஒன்று மின்று. தொன்மை

யின் மட்டுமா உயர்வுடையது? பல்வகையானும் ஆய்ந்து நோக்கின் ஒரு நூலும் அதற்கிணையின் றென்பது தெற்றென விளங்கும். தெய்வப் புலமைத் தேவராற் பாடப்பட்டது; பாக்களின் முதன்மையான குறட்பாவா லியற்றப்பட்டது; சங்கப் புலவர் பலரானும் போற்றிப் புகழ்ந்து பாராட்டிய பல பாடல்களைக் கொண்ட பெருமையுடையது; நாற் பொருளும் பயக்கும் நன்னெறி யுடையது; சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற உண்மை யமைந்தது; மக்கள் வாழ்வுக் குரிய வழிகாட்டுவது; குலம், மதம் முதலிய கொள்கைகளை யொழித்து நல்லொழுக்கத்தையே நிலைநாட்டுவது; சொல்லினிமை பொருளாழந் தோன்ற நிற்பது; இலக்கண வரம்புக்கு எடுத்துக்காட்டா யிலங்குவது; புலவர் பலரானும் எப் பொருட்கு மேற்கோள் எடுத்துக் காட்டத்தக்க சொற்பொருளமைந்தது; மேனாட்டறிஞர் பலருங் கண்டு வியந்து தத்தம் நாட்டுமொழியிற் பெயர்த் தெடுத்துய்த்து வைத்துப் பேணும் பெருமை பெற்றது; எந்நாட்டறிஞரும் இதற்கிணையாம் நூல் இன்றெனப் போற்ற நின்றுலவுவது திருக்குறள் நூல்.

திருக்குறளிருந்த இடம்

இந் நூலை மேற்கணக்கினும் மேனூலாக வைத்தெண்ணுவதே பொருத்தமாம். கீழ்க்கணக்கின் நடுவில் நிற்கும் ஒரு நூலாக இதுகாறும் எண்ணி வந்தோம். திருக்குறள் ஏட்டுப் படிவத்தினின்று அச்சுப்படிவமாய அந்நாள்முத லிந்நாள்வரை கீழ்க்கணக்கு நூலென்றே கொண்டனர் புலவர் பலரும். கழகம், கல்லூரி, பள்ளி பயிலும் புலவர் மாணவர் எவர்க்கும் பகுத்துக் கூறியும் வந்தனர். பாடப் புத்தகங்களிலும் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக வரைந்து பதித்துள்ளமை கண்டோம். இனி மேலும் அம்முறை நடவிடாது திருத்திப் பொருத்துமுறை காண்பாம்.

திருத்தம்

திருக்குறளைக் கீழ்க்கணக்கினுட்சேர்ப்பதற்குக் காரணமாய் நின்றது "நாலடி நான்மணி" என்ற முதற் குறிப்புடைய

வெண்பாவே. பத்துப்பாட்டு முதனினைப்புக்கு "முருகு பொருநாறு" என்பதும், எட்டுத்தொகை முதனினைப்புக்கு "நற்றிணை நல்ல" என்ற வெண்பாவும் அமைந்தனபோல, பதினெண் கீழ்க்கணக்கு முதனினைப்புக்கு இஃதமைந்தது. அவ்வெண்பாக்கள் பாட வேறுபாடின்றி நின்றன; இஃது பல வேறுபாட்டுடன் வழங்குகின்றன. பாட வேறுபாடின்றி வழங்கும் வண்ணம் ஒரு திருத்தஞ் செய்வாம். அஃது அடியிற் குறிக்கப்படுவது.

முதனினைப்பு வெண்பா

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைநாற்
பால்கடுகங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலை காஞ்சியே லாதி யிவையுடன்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு

இதனை யினி வேறுபடுத்துவது இயலாது, திருக்குறளைப் பிரித்து விட்டால்.

இவ்வெண்பா எப்போது யாராற் பாடப்பட்டது? யார் வாயிலாக வெளிவந்தது? எத்துணை வகையான பாடவேறுபாடு கொண்டது? என அறிந்த புலவர் ஒருவரும் இரார். ஆதலால் இவ்வெண்பா இவ்வாறு திருத்திக் கொண்டால் மறுப்புவராது. பொருளும் தெளிவாகப் புலப்படும். (1) நாலடியார், (2) நான்மணிக் கடிகை, (3) கார் நாற்பது, (4) களவழி நாற்பது, (5) இன்னு நாற்பது, (6) இனியவை நாற்பது, (7) ஐந்திணையைம்பது, (8) திணைமொழி யைம்பது, (9) ஐந்திணையெழுபது, (10) திணைமாலை நூற்றைம்பது, (11) திரிகடுகம், (12) ஆசாரக் கோவை, (13) பழமொழி நானூறு, (14) சிறு பஞ்ச மூலம், (15) இன்னிலை, (16) முதுமொழிக் காஞ்சி, (17) ஏலாதி, (18) கைந்நிலை எனப் பதினெட்டாம். "முப்பால்" என்பதை "நாற்பால்" எனவும், இன்னிலை காஞ்சியுடனேலாதியென்பவே, கைந்நிலையவாங் கீழ்க்கணக்கு" என்பதை "இன்னிலை காஞ்சியே லாதி யிவையுடன், கைந்நிலையுமாங் கீழ்க்கணக்கு" எனவும் நாம் திருத்திக் கொள்வோம். நாற்பால் என்பதற்கு ஐந்திணையின் நாற்பகுதியாய நூல்கள் எனப்பொருள் கொள்

வோம். நாநூற்பது எனப் பாடிய புலவர் ஐந்திணை நாற்பால் எனப் பாடவேண்டும் அன்றோ? இன்றெனில் ஐந்திணைப் பொருளமைந்த நூல்கள் அத்தனையையும் உணர்த்தும் நாற்பால் என்ற பாடம் முப்பால் எனப் பின்னர் வேறுபட்டிருக்கும் என்றே விளம்புவோம். இன்னிலையும் கைந்நிலையும் தனித் தனி நூல்களாக இருப்பதால் இரண்டென எண்ணுவோம். கைந்நிலையை ஒரு நூலாக எண்ணுங் கருத்துப் பாடியவர்க்கு இன்றெனின் வேறு அடைமொழிதந்து நிறைத்திருப்பார். கைந்நிலை என்பது ஒரு நூலாக இருக்க அதனை விடுத்து "ஒழுக்க நிலையையுடைய" எனப் பொருளமைத்துப் பாடுவரோ? பாடார் "கைந்நிலையவாம்" என்பதைக் "கைந்நிலையுமாம்" எனத் திருத்துவதால் இழுக்கொன்றும் இன்று.

"நாலடி நான்மணி நாநாற்ப தைந்திணைமுப், பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம் இன்னிலைசொற் காஞ்சியுட னேலாதி யென்பவே, கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்ற பாடத்தை இன்று முதல் விடுப்போம்; இன்னும் வேறு வகைப் பாட வேறுபாடுகள் இருப்பினும் அவற்றையும் ஒழித்துத் திருத்திய பாடத்தையே கருத்திலிருத்துவோம். இனிப் பதித்து வெளியிடும் நூல்களினும் இப்பிழை வராமற் போற்றுவது தமிழ்ப்புலவர் கடனும். அச்சகத்தார்க்கும் இத்திருத்தத்தை யறிவித்து இனிப் பதித்து வெளியிடும் நூல்களில் இப்பிழை வராமற் காக்குமாறு வேண்டுவோம்.

இத்திருத்தங் குறித்து மறுத்து வினவுவார் பலர்க்கும் விடை கூறுவம் இத்திருத்தம் எவ்வாறு ஆய்ந்து கண்டீர் என வினவில் இஃது ஒருவர் மனத்துள்ளிருந்த பாடவேறுபாடு என்போம். எங்குள்ளது எனின் நும்பாடம் எங்குள்ளது என எதிர் வினவுவோம். "நாற்பால்" என்ற பாடத்தை ஏட்டிலிருந்து எடுத்தெழுதியவர் "முப்பால்" எனப் பிழையாக வரைந்தனர் போலும் பாடிய ஆசிரியர் முப்பாலைத் தப்பாகக் கீழ்க்கணக்குட் புகுத்தி எண்ணுவாரா? கீழ்க்கணக்கு நூலுட் புகுத்தப்பட்ட நூல்களில் திருக்குறளை பொத்தநூல் எனவே

னும் உளவா? ஒத்த நூல்களை வைத்தெண்ணுவதன்றோ மரபு! முருகாற்றுப்படை முதலிய பத்து நூல்களும் சிறுபான்மை ஒத்தனவாதலின்பத்துப்பாட்டுஎன எண்ணப்பட்டன. நற்றிணை முதலிய நூல்கள் எட்டும் அவ்வாறே யொத்து நின்றனவாதலின் அவற்றை எட்டுத் தொகை என எண்ணினர். நாலடி, நான்மணிக் கடிகை முதலிய நூல்களும் சிறுபான்மை யொத்திருத்தலின் அவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கு என எண்ணினர். திருக்குறளை யொத்த நூல் ஒன்றேனும் இன்றென்பதே எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிபாம். ஆதலால் திருத்தினம் என அமைதி கூறுவாம். ஒப்புயர்வற்ற திருக்குறளைத் தனியே வைத்து மேற்கணக்கிலும் மேனூலாக எண்ணுவதே சாலச் சிறந்ததாம் என்றும் எடுத்து மொழிவாம். இதுவே தமிழன்பர் தமிழ்க்குச் செய்யுந் தலையாய கடமையாம்.

அடியில் வரும் வெண்பாக்களையும் தமிழன்பர் அகத்துப் பதிக்க வேண்டுவாம்.

(1) தெய்வப் புலமைத் திருவள் ளுவர்புகன்ற
மெய்ம்மைத் திருக்குறளை மேற்கணக்கின் மேனூலாக்
கைவைத்துக் கீழ்க்கணக்கி னின்று கழிக்கவகை
செய்வீர் புலவீர் தெளிந்து.

(2) திருக்குறள் பத்துப்பாட் டெட்டுத் தொகையென்
றிருக்கவதன் பின்கீழ்க் கணக்கைப் – பொருத்தியே
யேற்குமுறை கைந்நிலையை இன்னிலையை யுங்கூட்டி
மேற்பதினெட் டாகமொழி மின்.

(3) நாலடியென் வெண்பாவின் முப்பாலை நாற்பாலென்
றேலத் திருத்தியே யின்னிலை காஞ்சியே
லாதி யிவையுடன் கைந்நிலையு மாம்எனவும்
ஓதின்முர ணின்றியொழி யும்.

திருத்தம்

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைநாற்
பால்கடுகங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலை காஞ்சியே லாதி யிவையுடன்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு.

(4) எல்லாரு மித்திருத்த மேற்றிடுவர் யார்மறுக்க
வல்லா ரொருவர் வரினுமவர் – சொல்லாற்றல்
காண்பாங் குறள்கீழ்க் கணக்கு ளிருப்பதுநன்
மாண்பாவென் றுற்றிறவார் வாய் *

* 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் வெளியிடப் பெற்றகட்டுரை.
(சிலம்பு: 39 பரல்.1)

திருவள்ளுவரும் தொழிலாளரும்

டி. சந்தோசம், எம். ஏ., பி. எல்., எம். எல். சி.,
வழக்கறிஞர், மதுரை.

வாழ்வு முக்கூறுடையது. அரசியல், சமூகம், சமயம் என்பன அவை. அதில் அரசியல் தலைசிறந்தது; முதன்மையானது; அனைத்தையும் அமைப்பது. உயர்த்துவது. அரசியலின் வழியே சமூகம், சமயம் என்பன வாழ்வு பெறும். வளம் பெறும். வலிமைபெறும். அவ்வரசியல் எதன்வழி நிகழும்? உழைப்பாளர் வழி நிகழும். உழைப்பாளர் என்பவர்யார்? உடல் உழைப்பாளர், மூளை உழைப்பாளர் ஆவர். உடல் உழைப்பாளர் உழவர்கள், தொழிலாளர் என்பவர். உழவர்கள், தொழிலாளர் வழியே, அரசு அமையும், ஆட்சி செயல்படும் என்பது இன்றைய அரசியலார் ஒப்பிய நெறி. இதனை வள்ளுவர், தம் குறட்பாக்களில் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். "ஏர்ப்பின்னது உலகம்" என்ற வள்ளுவத் தொடர் இதனை நன்கு வலியுறுத்தும். உழவர் வழி, தொழிலாளர் வழி உலக அரசியலும் செயல்படும், செம்மைப்படும், வாழ்வு பெறும், வளம்பெறும், வலுப்பெறும் என்பது அவர் கொள்கை.

தொழிலாளர்கள், வாழ்வைப் படைப்பவர்கள், அனைத்தையும் வெல்பவர்கள். "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்று வாயார வாழ்த்தினர் பாரதியார். "பிரம தேவன் தலைமை, இங்குச் செய்பவர்கள் தொழிலாளர்களே" என்றார். அவர்கள் புகழுக்குரியவர்கள் என்பது அவர் கணிப்பு. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்ந்தவர் அவர், வாழ வேண்டுமென்று" விரும்பியவர். தொழிலாளர்கள் உலக மக்கள் அனைவரையும் வாழ வைப்பவர்கள். அவர்கள் உலக வாழ்விற்கு அச்சாணி போன்றவர்கள். உலகத் தேர் அச்சின்றி உருளுமோ? உருளாது. "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்ற குறள் தொடர் முற்றும் பொருத்தமானது.

தொழிலாளர்கள் இன்பத்தினைப் படைப்பவர்கள். அஃது அவர்தம் உயிரோடு ஒட்டிய பண்பு. அவர் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவர், மழை போன்றவர். மழை கைம்மாறு வேண்டிநிற்கிறதா இல்லையே! இன்பத்தினை ஆக்கு பவர், அளிப்பவர், உலகைப் படைப்பவர் "தான் உலகுக்காக உலகம் தனக்காக" என்ற நிலையை உருவாக்குபவர் தொழிலாளர்களே! உலகத்துச் செல்வத்தைப் படைப்பவர்கள் அவர்களன்றோ? படைக்குச் செல்வம் எவர் கைப் படல் வேண்டும்? தொழிலாளர் கைப்படல் வேண்டும். செல்வம் அவர்கைப்படின் ஊருணி நீர் போன்றும், உள்ளூர்ப் பழுத்த மரம் போன்றும், மருந்தாகித் தப்பா மரம் போன்றும் பயன் படும் என்பது வள்ளுவர் கருத்தோட்டம். அந்நிலையைப் படைக்கத் தொழிலாளர்களை வள்ளுவர் அழைக்கின்றார். அறை கூவி அழைக்கின்றார். அவர் குரலுக்குத் தொழிலாளர்கள் செவிசாய்ப்பாராக!

செல்வத்தை ஆக்கும் உரிமையுடையவர்கள், அதனை ஆளும் உரிமை உடையவர்கள் உழவர்கள், தொழிலாளர்களே! அவர்தம் ஆற்றலை, கடனை, பொறுப்பை உணர்வார்களாக! உலகம் அவர்களிடம் இதனை எதிர்பார்க்கிறது. அவர் பொறுப்புணர்ந்து கடனாற்றின் உலகம் அவர் காலடியில் வந்து நிற்கும். இன்றேல் உலகம் புலந்து ஊடிவிடும். இதனைத் தொழிலாளர்கள் ஊன்றி உணர்வார்களாக!

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

என்ற குறள் உணர்த்தும் நீதியைத் தொழிலாளர் பெருமக்கள் உணரும் நாளே, உலகப் பொன்னாள், நன்னாள், மறுமலர்ச்சி நாள். அதனைத் தொழிலாளர்தம் வலிய கைகள் படைக்குமாக!

தொழிலாளர்கள் உலக நலத்துக்குப் பொறுப்பேற் பவர்கள். உலக நலத்துக்கே வித்தானவர்கள். தொழிலாளர் வாழ்வில் - உழைத்து வாழும் வாழ்வில் - துன்பம் உண்டு. சிரமம் உண்டு. ஈத்துவக்கும் இன்பமும் எண்டு. "உழந்தும் உழவேதலை" என்றார் வள்ளுவர். உலக நலங் கருதித் துன்பப்

படுபவரன்றோ வணக்கத்துக்குரியவர். மகப் பேற்றுக்குரியவர் தாய்மார்கள். மகப் பேற்றினால் ஏற்படும் துன்பம் கொஞ்சமா? அதனை எழுத இயலுமா? சொல்லுந் தரமாமோ? அதனாலன்றோ "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்செய்திட வேண்டும்அம்மா" என்றார் கவிமணி அவர்கள். பொறுப்புள்ளவர்களையே உலகம் போற்றும்; வணங்கும்; அடிபணிந்து நிற்கும். எனவே, அவர் வாழ்வே உயர்ந்த வாழ்வு; சிறந்தவாழ்வு. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்பது வள்ளுவ நெறி. மற்ற மக்கள் தொழிலாளர்களைத் தொழுது, அவர் ஆக்கும் செல்வத்தில் தம் வாழ்வை இணைத்து, அதன் வழிஉண்டு, அவர் பின் செல்பவர்கள்; செல்ல வேண்டியவர்கள்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றார் வள்ளுவர்.

உலகம் எத்தனையோ அரசுகளை – பேரரசுகளைக் கண்டிருக்கிறது. எண்ணற்ற ஆட்சி முறைகளையும் கண்டது. அரசன் படை பலம் உடையவன்; பணபல முடையவன்; அதிகார பலம் உடையவன். அவன் வாழ்வும், அவன் செலுத்தும் ஆட்சிச் சிறப்பும் எதன் வழி இயங்குவன? தொழிலாளர் வழியே இயங்கும்.

"பொருபடை தருஉம் கொற்றமும்
உழுபடை ஊன்று சால்
மருங்கின் ஈன்றதன் பயனே" என்று பாடினான் புறநானூற்றுப்புலவன். "தொழிலாளர் உழைப்புக்கு – உயர்வுக்கு அடி பணிந்து அரசு இயங்கும்; இயங்குதல் வேண்டும்" என்பது வள்ளுவர் நெறி.

"பலகுடை நீழலும் தங்குடைக்கிழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்"

என்று மன்னன் வாழ்வையும், மன்னன் மதிக்கும் செல்வ வாழ்வையும், உழவன் வாழ்வின் கீழ், தொழிலாளர் வாழ்வின் கீழ்க் கொண்டு வந்து நிறுத்தினார் வள்ளுவர்.

இன்று உலகம் எவ்வரசை வேண்டுகிறது? தொழிலாளர் தலைமை ஏற்று நடத்தும் அரசையன்றோ உலகம் வேண்டுகிறது. சான்றோர் வேண்டுகின்றனர்

அவ்வுலகில்தான் வறுமை இல்லை; வள்ளல் தன்மை இல்லை. அறியாமை இல்லை. அறிவுக் குவியல் இல்லை, பொருட் காவலில்லை, திருட்டில்லை; தீங்கில்லை, துன்பம் இல்லை; இன்பம் உண்டு.

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை"

என்ற நிலை அங்கு ஏற்படும்!

"கொள்வா ரிலாமையால் கொடுப்பாரு மில்லையாகும்
கள்வா ரிலாமையால் பொருட்காவலும் இல்லை"

என்ற நிலை உருவாகும்.

உலக அமைப்பு முறை செவ்வையாக இல்லாவிடில் ஒரு பக்கம் செல்வக் குவியலும் மறு பக்கம் வறுமைப் பள்ளமும் ஏற்படும்.

"அண்மையன் பசியால் வாட
அணங்காடு மாடி வாழ்தல்
மண்ணயன் குற்ற மன்று
மன்னிடும் ஆட்சிக் குற்றம்
தண்டனை கர்மம் என்னல்
தயவிலார் கூற்றே அப்பா"

என்று சமுதாய ஏற்றத் தாழ்வுக்கு அரசியல் அமைப்பே காரணம் என்றார், தொழிலாளர் தந்தையாம திரு. வி. க. அவர்கள்! உழைப்பவர் தாழும் நிலை எய்தின் அவர் வறுமை எய்துவர்; பின் வாழ்வை இழப்பர்: பிச்சைஏற்பர். பிச்சை எடுக்கத் தேவையில்லா நிலையைத் தோற்றுவிப்பவர் யார்? தொழிலாளர். தோற்றுவிக்கும் அரசு எது? தொழிலாளர் அரசேயாகும்! அவர் பொருட் பொதுமை என்ற ஒன்றை ஈந்து அந்நிலையை மாற்றுவர், இன்பத்தைத்தேக்குவர்.

"இரவார் இரப்பார்க்கொன் றிவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்".

என்றார் வள்ளுவர். அவர் கண்ட தொழிலரசில் எவரும் இரக்கும் நிலை — பிச்சை எற்கும் நிலை இருக்காது. இந்நிலையை

அமைப்பவர் யார்? தொழிலாளரே. அவர் கைகட்கே அவ்வாற்றல் உண்டு!

தொழிலாளர் அரசின் முதிர்ந்த நிலை "யாமார்க்கும் குடியல்லோம்" என்ற நிலையே. அங்கு ஆளும் நிலையும் இல்லை; ஆளப்படும் நிலையும் இல்லை. எல்லாரும் இந்நாட்டு மன்னர். இடைக்காலத்தில் அங்குத் தலைவன் உண்டு. அவன் குடி மக்களாகிய தொழிலாளர் எண்ணத்தின் வழிச் செயல்படுபவன். இதனைக் "குடிதழுவிக் கோலோச்சும் மாநில மன்னன்" என்று குறிப்பிட்டார், வள்ளுவர். தலைவன் கடனென்ன? வாழ்க்கையைப் புள்ளி அளவில் கணக்கிடுகின்றனர் இன்றையப் பொருளாதார வல்லுநர். வாழ்க்கைப் புள்ளியில் உயர்வு தாழ்வு ஏற்படுதல் உண்டு. தலைவன் நாள் தோறும் வாழ்க்கைப் புள்ளியை அறிந்து வருதல் வேண்டும். அதற்குத் தகுந்த அளவு தொழிலாளர்கட்கு ஊதியம் தருதல் வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாளர்கள் மனங்கோணாதிருப்பர். அவர்கள் மனங்கோணாதபடி தலைவர் நாள்தோறும் அவர் நலத்தில் கருத்துச் செலுத்தல் வேண்டும். அவர்களின் வாழ்வின் நிலைகளை நாள்தோறும் ஆராய்ந்து உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்ந்து ஆட்சி செலுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் உலகும் வாழும்.
இதனை வள்ளுவர்,

"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு"

என்று குறிப்பிட்டார்.

நாட்டுத் தலைவன் இதனை மறவாது செயல்படுதல் வேண்டும்; மதித்துச் செயல்படுதல் வேண்டும். இன்றேல் உழைப்பவர் மனங் கோணுவர் பின் வேலைநிறுத்தம் செய்வர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் உலகம் என்னாகும்? பற்றற்ற துறவிகளும் துடிப்பர்; துவள்வர்; வாழ்வை இழப்பர். அவர் நிலையே அஃதென்றால் மற்றவர் நிலை என்னாவது, சொல்லவும் வேண்டுமோ? உலகம் அழியும், அல்லல் படும்.

"உழவினுர் கைம்மடங்கின் இல்லை, விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை"

என்கிறது வள்ளுவம்

தொழிலாளர் உழைக்கப் பிறந்தவர்கள் வறுமை அவர்கள் தோழன். பொறுமை அவர்கள் நல்லணி என்று அறிவுரை கூறிக் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு செய்வது எரிமலையின் மேலிருந்து வீணை வாசிப்பது போன்ற பேதைமைச் செயலாகும். அவ்வாறு கூறுவோரை அரசன் ஒறுத்தல், ஒழித்தல் வேண்டும்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்று வள்ளுவம் குறிப்பிடும்.

பயிர் வளர்ச்சிக்குக் களைஎடுத்தல் வேண்டும். தொழிலாளர் வாழ்வுக்கு இது போன்ற கயமைகளை ஒழித்தல் வேண்டும். சுரண்டும் இனத்தை-வேரோடு அழித்தல் வேண்டும், இதுவே செங்கோல்-இன்றேல் கொடுங்கோல். கொடுங்கோலை உலகம் பொறுக்குமோ? ஒறுக்கும்? கொடுங்கோலன் பிடியிலிருந்து விடைபெற்றுத் தொழிலாளர் காலடியில் வந்து அரசு நிற்கும். சார் மன்னனின் கொடுங்கோல், தொழிலாளர் அரசை நிறுவ வில்லையா? இதைத்தான் வள்ளுவர்,

"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு."

என்ருர். திரு எது? அரசே திரு: வள்ளுவர் போற்றிய அரசு தொழிலாளர் அரசு. அவ்வரசே உயர்ந்தது என்ருர். குறள் தொழிலை, தொழிலாளரை மதிப்பது; உயர்த்துவது.

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"

என்று இன்பத்துப்பாலுள்ளும் மறவாது குறித்தார்.

வாழ்க வள்ளுவம். வாழ்க தொழிலாளர்!

———

தமிழ் வளர்த்த பெரியார்கள்

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

கி. பழனியப்பன், மதுரை.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன்காண்
"கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ்"

என்ற தெய்வத் தமிழ்ப் பாக்களின் வாயிலாக, நற்றமிழை ஆய்வதற்குத் தண்டமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றிச் சிவ பெருமானும் தமிழ்ச்சங்கத்தே அவர்களுடன் அமர்ந்து ஆய்ந்தார் என்பதை நாம் அறிகின்றோம். அங்ஙனம், செந்தமிழை ஆராய்தற்கென அமைந்த சங்கங்கள், தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என அழைக்கப்பட்டன. அச்சங்கங்களை நிறுவிய பாண்டியர், முறையே, காய்சினவழுதி, வெண்டேர்ச்செழியன், முடத்திருமாறன் ஆவர். தலைச்சங்கம். ஏறத்தாழக் கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன் நிலவியது அதன் பின்னர் இடைச்சங்கமும், கடைச்சங்கமும் தோன்றலாயின. இவற்றுள் கடைச்சங்கம், கி மு. 12 அல்லது 15-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று இலக்கிய வரலாற்றாசிரியர் கூறுவர்.

இச்சங்ககாலத் தமிழ் மன்னர்களுக்குப் பின், "களப்பிரர்" என்ற கூட்டத்தினரின் ஆட்சியின் கீழ்த் தமிழகம் வந்தது. அதன் பயனாய்த் தமிழரசு, தமிழ் வாழ்வு சீரழிந்தன. தமிழ் இலக்கியங்கள் பலவும், நிலை சரிந்து மறைந்தன. தமிழ் வளர்த்த பாண்டியரும் அழிந்தனர். தொடர்ந்து நிகழ்ந்த பல அரசியல் மாற்றங்களினாலும், ஆட்சி நடத்தினோர் பேசும்மொழி வேற்றுமொழிகளாய் இருந்தமையாலும், தமிழைப் போற்றி வளர்த்த சங்கம் மறைந்தமையாலும் தமிழ்மொழி நாளடைவில்

தன் செல்வாக்கைச் சிறிது சிறிதாக இழக்கலாயிற்று. சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும், தமிழ்நாட்டிலேயே. தமிழ்மொழிக்கு ஓர் இழிநிலை உண்டாயிற்று. தாய் மொழியாம் தமிழில் பேசுவதும், தமிழ் நூல்களைப் படிப்பதும், நாகரிக வாழ்வுக்கு உகந்தது அல்ல என்று தமிழ் மக்களே கருதும் அவலநிலை உண்டாயிற்று. நற்றமிழ்ப் புலவர்கள், மக்களால் போற்றப்படவில்லை. கிடைத்தற்கரிய தமிழ் ஏடுகள், கரையான்களுக்கும், நெருப்புக்கும், நீருக்கும் இரையாயின. எனினும், தமிழகத்தில் ஆங்காங்குத் தமிழ்ப்புலவர்களும், புரவலர்களும் சிலர் இருந்து கொண்டு, தமிழ்ச்சுடர் முற்றும் அவியாதவாறு பாதுகாத்து வந்தனர். அது, தமிழர்கள் செய்த தவப்பயனேயாகும்.

பாண்டியர்களுக்குப்பின், புலவர்களைப் போற்றிப் புரந்து வந்த பெருமை, சேதுபதிகளாகிய இராமநாதபுரத்தரசர் குடும்பத்தாருக்கே சாரும். இச் சேதுவேந்தர் குலத்தில் தோன்றிய பெருந்தகையாளரே, வள்ளல் பாண்டித்துரைசாமித் தேவரவர்கள்.

சேதுநாட்டு ஆட்சியைச் சீருடன் நடாத்திய அரசியல் அறிஞர் பொன்னுச்சாமித்தேவரின் அருமை மைந்தராய் 1867-ஆம் ஆண்டு மார்ச்சு 21-ஆம் நாள், "உக்கிரபாண்டியன்" என்ற பாண்டித்துரைசாமித்தேவர் தோன்றினர். அவர் தோன்றிய காலம் இராமநாதபுரத்தின் பொற்காலம். ஏன், தமிழ்ப் புலவர்களுக்கே ஓர் நற்காலம் எனலாம்.

பாண்டித்துரை அருந்தமிழுடன் ஆங்கிலத்திலும் ஓங்கிய புலமை பெற்றார் நாளும் காலையில் முறைப்படிச் சிவபூசை செய்தபின்பே, பிறவேலைகளைக் கவனிக்கச் செய்வார். மதுரையில் கோவில் கொண்டுள்ள சோமசுந்தரப் பெருமானிடத்துப் பெரிதும் ஈடுபாடுடையவர். அவர் மதுரைக்குச் செல்லுங்காலத்தெல்லாம். அந்நகரின் எல்லையை அடைந்தவுடனே வண்டியினின்றும் இறங்கி, வானளாவிய கோபுரத்தைத் தொழுவாராம்.

இவரது பொழுதுபோக்கு, புலவர்கள் பலரும் தம்மைச் சூழ்ந்திருக்கச் சிந்தைக்கும் செவிக்கும் இனிய புலமை விருந்தைப் பருகுவதேயாம். தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சியுடைய தேவர், தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்று எண்ணிப் பலவிடங்களுக்கும் சென்று கேட்டார்ப் பிணிக்கும் தன்மையில், இனிய சொற்பொழிவுகள் ஆற்றுவது வழக்கம். இவருடைய கம்பராமாயணச் சொற்பொழிவுகள் தனித்தன்மை பெற்றன. பாடல்களுக்குப் பிறர் எவரும் கூறாத அரிய பல புதிய நயங்களை அழகுற எடுத்தோதுவார். இவ்வாறு சொற்பொழிவுகள் நிகழ்த்துவதுடன் நில்லாது திருக்குறள் போன்ற சிறந்த நீதிநூல்களுக்குப் பாடமும் பலருக்குச் சொல்வாரெனின், இவர்தம் தமிழார்வத்தை என்னென்பது?

தேவரவர்கள், ஒருசமயம், சொற்பொழிவு ஆற்றுவதற்காக மதுரை நகரம் சென்றபொழுது, சில குறிப்புகள் எடுக்கத் திருக்குறள் நூல் ஒன்று தேவைப்பட்டது. மதுரையில் எங்குத் தேடினும் எவரிடம் கேட்டும் திருக்குறள் நூல் ஒன்று கூட அன்று கிடைக்கவில்லை. சங்கம் வளர்த்த தமிழ் மதுரையா இது என்று உள்ளம் கவன்றார். மதுரையின் இழிநிலை கண்டு ஏக்கமுற்றார். அந்நிலையைப்போக்க அவரது நல்லுள்ளம் கிளர்ந்தெழுந்தது. அக்கிளர்ச்சியால் தோன்றியதே நான்காம் தமிழ்ச் சங்கம் எனும் மதுரைத் தமிழ்ச்சங்கமாகும்.

1901-ஆம் ஆண்டு, செப்டம்பர் 14-ஆம் நாள். புலவர் பாராட்ட, அன்பர் வாழ்த்தொலி எழுப்ப, மதுரைத் தமிழ்ச் சங்கம், வள்ளல் பாண்டித்துரையவர்களால், தோற்றுவிக்கப் பெற்றது. சங்கம் கண்ட தேவர், தமிழாய்ந்த புலவர் பலரை நாடெங்கும் அனுப்பிப் பண்டைத் தமிழ் ஏடுகளைத் தேடிக் கொணருமாறு செய்தார். அவைகள் தக்க புலவர்களால் ஆராயப்பட்டு அச்சிடப்பட்டன. தமிழை முறையாகக் கற்பிப்பதற்கெனத் தமிழ்க் கல்லூரி ஒன்று நடத்தல், அரியதோர் நூல் நிலையம் அமைத்தல், உயர்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கெனத் தமிழ்த் தேர்வுகள் நடத்துதல், தமிழ் ஆராய்ச்சிக்கென்றே ''செந்தமிழ்'' எனும் திங்கள் ஏடு நடத்துதல், ஆகிய பணிகளை மதுரைத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டது. இப்

பணியில் அவருக்குத் துணையாக இருந்த தமிழ்ப்பெருமக்கள் பலருள், மகா வித்துவான் ரா. இராகவையங்கார், மறைமலை யடிகள், மகாமகோபாத்யாய உ.வே. சுவாமிநாதய்யர், மு. இராகவய்யங்கார், மகாவித்துவான் அரசஞ் சண்முகனார், திரு. நாராயணய்யங்கார், மு. ரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. ரா. அருணாசலக் கவிராயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், ஜே. எம். நல்லுசாமிப் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், விபுலானந்த அடிகள், யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், முதலியோரும் ஆவர். இத்தொண்டில் தேவரவர் களுக்கு முழு ஆதரவு கொடுத்து ஊக்கு வித்த பெருமகனார் பெரும்புகழ் பெற்ற தமிழ் வள்ளல் பாசுகர சேதுபதி மன்னராவர்.

சங்கம் கண்ட பாண்டித்துரைத்தேவர் அச்சங்கப்புலவர் பலருடன் தாமும் ஒருவராய் அமர்ந்து. தமிழாய்ந்து பல அரிய தமிழ் நூல்களைத் தொகுத்து வெளியிட்டார் பாவலர் போற்றும் பண்டைப் பனுவல்கள் பலவும் தொகுத்து "பன்னூற்றிரட்டு" என்றும், சைவ நூல்களின் அரியகருத்துக் களைத் தொகுத்துச் "சைவ மஞ்சரி" என்றும், மதுரைத் திருக்கோவிலின் திருப்பணி வரலாற்றை ஆய்ந்து, ஏட்டுப் படிகளில் இருந்து தொகுத்துக் "திருப்பணிமாலை" என்றும், இங்ஙனம் பல அரிய தமிழ் நூல்களைத் தமிழுலகுக்குத் தந்தவர் பாண்டித்துரைத்தேவராவர். இந்நூல்கள் தேவரவர்களின் நுண் மாண்நுழை புலத்தையும், அரிய ஆராய்ச்சித் திறத்தை யும் நமக்கு நன்கெடுத்துக்காட்டுவனவாகும்.

சங்க காலத்தே புலவர்களை மதித்துப் போற்றிய புரவலர்களோடு ஒப்பவைத்து எண்ணத்தக்க பெருமைக்குரியவர் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் ஆவர். ஒரு சமயம், இவருடைய அவைப்புலவரான திரு. நாராயணய்யங்கார், தேவரைக் காண அவரது மாளிகைக்கு வந்தார். அச்சமயம் தேவர் அரண்மனையில் இல்லை ஐயங்காரோ, அயர்ச்சி மிகுதியால் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவர், தம்மை மறந்து உறங்கிவிட்டார். அவர் கண்ணயர்ந்த சில நிமிடங்

களில் தேவர் உள் நுழைந்தார். தேவருடைய பணியாளர் ஐயங்காரை எழுப்ப விரைந்தான். ஆனால் தமிழுளங்கொண்ட தேவரோ, அவனைத் தடுத்து, விரைவில் விசிறி கொணருமாறு பணித்தார். விசிறி வந்ததும், அதனைத் தாமே கரத்தில் பிடித்து, சோபா அருகே அமர்ந்துகொண்டு, ஐயங்கார் நன்றாக உறங்குவதற் கேற்றவாறு வீசலானார். இவ்வருமைச் செயல் சங்க காலத்தே பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேரப் பெருமன்னன், தன் அரண்மனையிலிருந்த முரசு கட்டிலில் அறியாது கண்ணுறங்கிய மோசிகீரனார் என்ற தண்டமிழ்ப் புலவருக்குக் கவரி வீசிய பான்மையை நிகர்ப்பதன்றோ? சில்லென்று காற்று மெல்லெனத் தம்முடம்பிற்படவே ஐயங்கார் கண்விழித்து எழுந்தார். தம்மருகே வள்ளற் பெருந்தகை பாண்டித்துரைத்தேவர் விசிறிகொண்டு தம் மென்கரத்தால் வீசிக்கொண்டிருப்பதைக் கண்டார். தாம் காணும் காட்சி, கனவோ அன்றி நனவோ என எண்ணினார். உண்மை ஓர்ந்தார். "செந்தமிழ் காக்கும் கரங்களல்லவோ இவை" எனக்கருதி, தேவரவர்கட்குப் பல்லாண்டு பகர்ந்தார். தேவரவர்கள்' தமிழினிடத்தும், தமிழ்ப் புலவரிடத்தும் கொண்டிருந்த தளராக் காதலுக்கு இதைவிடச் சான்று வேறு வேண்டுமோ?

தேவரவர்கள், மக்களிடத்து மட்டுமல்லாமல், பிற உயிரினம் எதுவாயினும் அருளுடன் நோக்கும் கருணை உள்ளம் கொண்டவர். ஒருசமயம், வேடன் ஒருவன் சிலகுருவிகளைக் கூண்டில் அடைத்து விற்பதற்காகத் தெருவழியே சென்று கொண்டிருந்தான். பறவையினம் படுந் துயரைக் கண்ட தேவரோ அவனை அழைத்து அக்கூண்டிலடைபட்டுக்கிடந்த எல்லாக் குருவிகளையும் விலைக்குவாங்கி, வானத்தே பறந்து செல்லக் கூட்டிலிருந்து விடுவித்தார்.

மற்றொரு சமயம், ஒருவர் திருக்குறளைத் திருத்தி அச்சிட்டுத் தேவரை அணுகி அவரின் பாராட்டைப் பெற விழைந்தார். தேவர், அந்நூலை வாங்கிப் பார்த்தார். பிழை பல மலிந்திருப்பன கண்டார். அந்நூல் மற்றவரிடத்தே சென்றால் நன்மையைவிடத்தீமையே மிகுதியாகும் என்று

எண்ணினர். எனவே, அச்சிட்ட அத்தனைப் படிகளையும் அவரிடமிருந்து விலை கொடுத்து வாங்கி அவைகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தினர். நல்ல தமிழ் நூல்கள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் தேவர் காட்டிய அக்கறைக்கு இது ஒரு சான்று.

இத்தகைய பெரியார் ஒருவரைத் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் எவ்வாறு பாராட்டியுள்ளார் என்பதை இங்குக் கூறுவது பொருத்தமாகுமென்று நினைக்கிறேன்.

"சீரியர் சொல்மிளிர் பாரி சாதம்
தால மார்தரின் மூலந் துறந்தெனத்
தாலந் துறக்குந் தமிழ்த்தொன் னூல்கள்
பழுதா காவணம் பரிசோ திப்பித்
தெழுதா வெழுத்தி லியைவித் திடுவோன்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோக மகற்ற
வானினு மானினும் வழங்குசெங் கரத்தான்
தேனினும் பாலினுந் தித்தித் தோங்குந்
தண்பா மாலை சாற்றுவோன் புறப்பொருள்
வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்
....— ....
ஈசனை யன்பிற் பூசனை புரிவோன்
சிவனடி யவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றுதவும் விழுச்சீர்ப்
பாண்டித் துரைப்பெயர் படைத்தகோ மானே"

வாழ்க தேவர் தமிழ்ப்பணி.

திருச்சி வானொலி நிலையத்திற் பேசியது. "வானொலி' 22-9-67 இதழில் வெளிவந்துள்ள கட்டுரை.

வள்ளுவர் காட்டும் வழி

—]-[—

ஆர். இராமானுசம், பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், மதுரை.

எப்படியும் வாழலாம் என்ற கொள்கையை விடுத்து, வாழப்பிறந்த மக்கள், இப்படித்தான் வாழவேண்டும் என்று வழி காட்டுவனவே நீதி நூல்களாகும். அறங்களில் சிறந்த அறங்களைச் சுட்டிக் காட்டிக் குறிக்கோள் வாழ்க்கையை அடையும் வழியைக் காட்டும் நூல் திருக்குறள். வாழ்வியல் அறங்களில் சிறந்தன எவை என அறத்துப்பாலிலும், அரசியலில் சிறந்தது எது என்பதைப் பொருட்பாலிலும், இன்பத்தில் சிறந்தது எது என்பதைக் காமத்துப்பாலிலும் காட்டுவார் வள்ளுவர். விண் உயர மேன்மையுடன் மனிதன் வாழ வேண்டும் எனக் குறள், வழிகாட்டினாலும், அவன் மண்ணில்தான் இருந்து வாழவேண்டும். ஆகையால், இந்த வாழ்விலேயே எளிமையாகச் செய்யவேண்டிய அறங்களை வலியுறுத்துவதே குறளின் நோக்கம்.

வாழ்வோடு இணைந்த நீதிகளை எடுத்துரைப்பதால் குறள் காட்டும் வழி இன்றும் மனிதன் செல்லத் தகுந்ததாக உள்ளது. எனவேதான், இன்றுள்ள தீராத பிரச்னையாக உள்ள தொழிலாளர் – உரிமையாளர் உறவு, நலம், தொழில் முன்னேற்றம் போன்ற தொழில் துறைபற்றிய நெறிகளுக்கும் வள்ளுவர் வழி காட்டுவதை அறிந்து வியக்கின்றோம்.

பொருட்பாலில் அரசன், அமைச்சன் என்று முடியரசுக்குரிய இயல்புகளைக்கூறும் வள்ளுவர் சுட்டிக்காட்டும் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், ஆள்வினையுடைமை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, பொருள்செயல்வகை, உழவு, நல்குரவு, இரவு, இரவச்சம் என்ற அதிகாரங்களெல்லாம் வாழத்துடிக்கும் மனிதன் வளரத் துணை செய்கின்ற

வையாம். வன்மையாக உழைத்து முன்னேற வேண்டும் என்று முயலும் தொழிலாளியும், நேர்மையாகப் பொருளீட்டி நாட்டுச் செல்வ வளத்திற்குத் துணை நிற்க வேண்டும் என்று விரும்பும் உரிமையாளரும் இக்குறட்பாக்கள் வழி நடப்பார்கள் என்றால், போராட்டமில்லாத, தொழிலாளி – உரிமையாளர் தொடர்பு நெருங்கிய சமுதாயம் ஒன்றை உருவாக்கலாம்.

தன் முயற்சியுடன் உழைத்துப் பிழைத்து முன்னேறுதல் வேண்டும்; அரசன் முதல் ஆண்டிவரை அவரவர் ஊக்கம் நிறைந்த முயற்சியே உயர்வு தரும், என்பதைப் பலவாறாக வள்ளுவர் வற்புறுத்துகின்றார். உயர்வை அடைய வேண்டும் என்றாலும் பழியோடு வரும் செயல்களைத் தவிர்க்கவேண்டும்.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தில் சான்றோர்
கழிநல் குரவே தலை"

என்பது குறள்.

மானம் குன்றும் செயல்களைத் தவிர்த்து ஊழையும் புறங்காணலாம். குறையாத முயற்சி உடையவர்கள் என்று மனித சக்திக்குப் பெருமதிப்பு அளிக்கின்றார்.

தந்தை வழிச் செல்வத்தை ஆள்வதைக் காட்டிலும் தன் முயற்சியால் பெறும் பொருள் ஆள்வதே சிறப்பு என்பது தமிழர் கொள்கை. "உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார்", எனவே வள்ளுவரும் இதனை வலியுறுத்த,

"தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலி னூங்கினிய தில்".

என்று அழுத்தமாகக் கூறுகிறார். நீதிக்குப் புறம்பாகாத முறையில், முயற்சியுடன் கிடைத்தது தெளிந்த நீர் போன்று கூழாயினும் அதனை உண்ணுவதை விட இனிமையாவது வேறொன்றுமில்லை.

மனித முயற்சியை மிக வலியுறுத்திக் காட்டவே குடிசெயல்வகை, உழவு, நல்குரவு, இரவு, இரவச்சம் என்று ஐந்து அதிகாரங்களை எழுதியுள்ளார், வள்ளுவர்.

ஆள்வினையோடு, நிறைந்த அறிவோடு தொழில் செய்கின்றவர்களுக்குத் தெய்வம்தானே மடியை இறுகக் கட்டிக்கொண்டு உதவி செய்யும். உழவின் உயர்வைப் பற்றிப் பேசும் வள்ளுவர் சோம்பித்திரிவாரைக் காணின் நிலம் என்ற நல்லாள் சிரிப்பாள் என்று இடித்துரைப்பார். இயல்பாக அறிவுக் குறைவுடன் இருப்பது பழியில்லை. ஆள்வினைத் திறமையுடன் செயலாற்றத் தயங்குவதே பழிப்பிற்கு உரியது.

ஆகவே சோம்பலின்றி உழைத்துக் கடமையை நிறைவேற்றினால் உரிமைகளை இயல்பாக அனுபவிக்கலாம். தொழிலாளரிடத்து இன்று மிகுதியாகக் காணப்படும் பொறுமையின்மை, குறைபாடுடைய மனம், போன்ற தன்மைகளுக்கு அடிப்படைக்காரணம் உழைப்பில் ஆர்வம் காட்டாமையாகும். முயற்சி, தொழில் முன்னேற்றம், திறமையைக்காட்டுதல் போன்ற தொழில் வளம் பற்றிய சிந்தனையை விடுத்துக் குறுக்கு வழிகளில் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய எண்ணுகின்றனர். வன்முறைச் செயல்களைச் செய்யவும் தயங்குவதில்லை. துன்பத்தை எதிர்த்துத் தூசாக நினைக்கும் மனவலிமை குறைந்து விட்டது. தாங்கள் கையாளும் வேலை நிறுத்தம், 'கேரோ' போன்ற வன்முறைச் செயல்கள் நாட்டுத் தொழில் வளத்தைப் பாதிக்கின்றன என்பதை மறந்து விடுகின்றனர். தேசப்பற்று, வேறு வகையான கட்சிச் சார்பான கொள்கைகளில் ஈடுபடுகின்ற போது குறைகின்றது. அன்பின் அடிப்படையில் மனித சமுதாயம் இயங்கவேண்டும் என்பதை மறப்பதால் தொழிலாளர், உரிமையாளர்களை எதிரிகளாக நினைப்பதும், உரிமையாளர்கள் மனித சக்தியின் உருவங்களாகிய தொழிலாளர்களின் நலன்களைப் புறக்கணிப்பதுமான வருந்தத்தக்க நிலை உருவாகி வருகின்றது. இந்தப் போராட்டத்தின் விளைவு, மனித சக்தியின் தேக்கம். தொழில் முன்னேற்றத்தின் தடை!

துன்பம் சென்று சேரும்இடம் உடம்பு. கலங்குவது எதற்கு? துன்பத்தைக்கண்டு சிரித்து அதனை எதிர்க்கவேண்டும். கடமையை ஆற்றும்போது எதிர்ப்புகளை எதிர் நீச்சல்

போட்டுக் கடக்கவேண்டும். கடமையில் கருத்து ஊன்றுவார்க்கு உரிமை இன்பம் தானே வந்தமையும். தன் இன்பம் கருதாமல் தொழிலை மகிழ்ச்சியுடன் செய்பவனே, தன் குடியைக் காப்பாற்றும் உண்மைத் தொழிலாளி.

''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்''.

மனித முயற்சிக்குத் தளராத உழைப்புத் தேவை. மடியின்மை வேண்டும். தொழில் நடத்துபவரும் தொழிலாளரும் சோம்பல், தொழிலில் விரைவு காட்டாது தாமதம் செய்தல், மறதி, தூக்கம் ஆகிய தீய பண்புகளுக்கு இடம் கொடுக்காது வேலை செய்ய வேண்டுமென வள்ளுவர் வகுத்து உரைப்பார். செய்வதற்கு அருமையான செயலாக இருந்தாலும் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்து முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இந்த எண்ணம் இருதரத்தார்க்கும் தேவை.

''அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''.

நினைவில் என்றும் போற்ற வேண்டிய குறள் இது.

முயற்சி இல்லாதவர்களை, தொழிலை மதிக்காதவர்களை உலகம் மதிக்காது. வேலை செய்யும் தொழிலாளி எப்போது தொழிலை மதித்துச் செய்வாரோ அப்போது உலகமும் அவரை மதிக்கும். உரிமையாளரும் மதிப்பர். ஆகவேதான்,

''வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரில் தீர்ந்தன் றுலகு.''

என்கின்றது குறள்.

குறட்பாக்கள் கூறுவனவெல்லாம் உழைத்து ஓடாகத் தேயும் தொழிலாளர்கட்கு மட்டுமே பொருந்துமா? உழைப்பை உறிஞ்சி, உல்லாசமாக வாழும் உரிமையாளர்களுக்கு ஒன்றுமில்லையா? தொழில் வளம், மனித சக்தி, உழைப்புத் திறம் என்று நாம் பலவாறாகப் பேசினாலும் உலகத்து இயற்கை

வறுமையும் செல்வமும் ஆக இரு முனைகளில் நிற்கின்றது. நல்குரவு என்ற அதிகாரம் வறுமைக் கொடுமையைக் கூறுகிறது. அதனைப் பிச்சையெடுத்துத் தீர்க்கலாம் என்று 'இரவு' என்ற பகுதியில் கூறும் வள்ளுவர் அதுவே வாழ்க்கைச் சட்டமாகலாகாது என்பதை 'இரவச்சம்' என்ற பகுதியில் வலியுறுத்துவார்.

வேலைவாய்ப்பு, வாழப்பிறந்த மனிதனுக்கு வாழ்க்கை வசதி செய்துதர முடியாத அரசு அழிந்து படுதலே நன்று என்று கடுமையாக எச்சரிக்கின்றார் வள்ளுவர்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்".

என்ற குறள், மக்கள் நன்மை கருதாத ஆட்சிக்கு அடிக்கும் சாவு மணியாகும்.

இல்லாமைக் கொடுமைக்கு அரசாங்கமே காரணம் என்ற உண்மை பெறப்படுகிறது. 'உலகியற்றியான்' உலகை நடத்தும் அரசனோ, மக்கள் தலைவனோ - ஏன் - மக்கள் அரசாங்கமோ - என்று கொள்ள இடமுண்டு. காலத்திற் கேற்ற குறள் இது. நாட்டில் வாழ்ந்து வளம் சேர்க்கும் செல்வர்களுக்கும் வறுமையை ஒழிப்பதில் பங்கு உண்டு. "ஒப்புரவறிதல்" என்ற பகுதியில் வள்ளுவர் செல்வர்களுடைய பொருள், ஊருணி நீர் போலவும், மருந்துச்செடி போலவும் பயன்பெற வேண்டுமென வலியுறுத்துகின்றார். ஈத்துவக்கும் இன்பமே சிறந்தது.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு".

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை".

என்பதுதான் உரிமையாளர்களின், பொருள் உள்ளவர்களின் வாழ்க்கைச் சட்டமாதல் வேண்டும். உழைப்பிற்கு ஊதியம் தருதல் வேண்டும். அதுவே உழைப்பில் ஊக்கம் காட்ட உதவும். சட்டங்கள் பலவற்றால் சாதிக்க முடியாதவற்றைச் சமரசமான அறநெறியின் அடிப்படையில் தீர்க்கலாம்.

உழைக்கும் கரங்களுக்கு ஊக்கம் தருதல் உரிமையாளர் கடமை: உரிமையாளர் நலனில் பங்கு கொள்ளுதல் தொழிலாளர் கடமை. நல்வாழ்வு இருதரத்தாரும் அடையும் வண்ணம் சட்டங்களாலும், உரிமை நலன்களாலும் காத்தல் அரசின் கடமை. கடமைகளை உணர்வதற்கு வழி காட்டுபவை சிறந்த நீதி நூல்கள். குறள் வழி தொழிலாளர் சமுதாயம் செயற்படும் காலம் வருதல் வேண்டும். மனித முயற்சி, செல்வப்பங்கிடு என்ற அடிப்படையில் மனித சமுதாய நிலை உயர வேண்டும். குறள்நெறி, வாழ்வியல் நெறி, உள்ளுவதெல்லாம் உயர்வாக இருக்க, உழைப்பின் வழி ஊதியம் பெருக, உண்மை நெறி காட்டுவது.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்".

இந்நெறியினைப் பின்பற்றி வாழ்வோமாக!

சங்கச் செய்திகள்

சங்கத் தேர்வுகள்

—]-[—

கல்லூரி / உயர் பள்ளி / பயிற்சிப் பள்ளித் தலைவர்களுக்கும் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் வேண்டுகோள்

அன்புடையீர், வணக்கம்.

கடந்த 65 ஆண்டுகளாகத் தமிழ்ச் சங்கம், மாணவர்கட்காக நடத்திவரும் தேர்வுகள் மிகவும் பயனுடையனவென்பதைத் தாங்கள் அறிவீர்கள். வழக்கம் போல் இவ்வாண்டும் வரும் 1968 சனவரி கடைசி வாரத்திலும், பிப்ரவரி 2-ஆம் வாரத்திலும் அத்தேர்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

தாங்கள் இதுகாறும் தமிழ்ச் சங்கத் தேர்விற்கு மாணவர்களை அனுப்பி உதவியமைக்கு நன்றி. அதுபோல் இவ்வாண்டும் மாணவர்களை அதிகமாகக் கலந்துகொள்ளச் செய்து, அதனால் இச்சங்கத்தொண்டு வளர்தற்கு உறுதுணை புரியுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இத்தேர்வுகள் பற்றிய விவரங்கள் கீழே தரப் பெற்றுள்ளன.

தங்களன்புள்ள,
கி. பழநியப்பன்,
செயலாளர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1
1968-தேர்வு விவரம்.

வகுப்புகள்.	தேர்வு நாள்.	நேரம்.
1. உயர்பள்ளி இறுதி வகுப்பு S. S. L. C. or Standard XI	27—1—1968.	காலை 10-12-30 மாலை 2- 4-30

2. பயிற்சிப் பள்ளி, முதியோர் இளையோர்	27—1—1968	காலை 10-12
3. கல்லூரி முதனிலை வகுப்பு (P. U. C.) இளங்கலை வகுப்பு B. A. (II Papers)	10—2—1968	காலை 10-1 மாலை 2-5
முதனிலை (P. U. C.) Advanced இளங்கலை B. A. III Paper	12—2—1968	காலை 10-1

தேர்வுக் கட்டணம்

1. பள்ளியிறுதி வகுப்பு:—	
பொதுத் தமிழ்	1–75
தொழிற் பிரிவு	1 00
2. பயிற்சிப் பள்ளி	1–00
3. கல்லூரி – முதனிலை (P U.C.)	
இரண்டாம் பிரிவு	2–00
சிறப்புத்தமிழ்	1–25
பட்டப்படிப்பு (B. A., B. Sc.)	3–50

கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதி நாள்

உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளிகள்	5—1—68.
கல்லூரிகள்	13—1—68.

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:—

மேலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

புலவர் தேர்வுகள்

வழக்கம் போல் இவ்வாண்டும், இம் மதுரைத் தமிழ்ச்

சங்கத்தின் நுழைவு, இளம்புலவர், புலவர் ஆகிய தேர்வுகள் நடைபெறும்.

தேர்வு நடைபெறும் ஊர்கள்:-

(1) மதுரை (2) திருப்பனந்தாள்.
(3) மார்த்தாண்டம்

தேர்வுக் கட்டணம்:-

1.	நுழைவுத் தேர்வு	ரூ 15/-
2.	இளம்புலவர் தேர்வு	ரூ 20/-
3.	புலவர் தேர்வு	ரூ 25/-

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம், ஒறுப்புக் கட்டணமின்றி 30-11-67க்குள்ளும், ரூ 1/- ஒறுப்புக் கட்டணத்துடன் 7-12-67க்குள்ளும் 'செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1' என்ற முகவரிக்கு வங்கி டிராப்டு (Bank Draft) மூலம் சங்க அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். குறிப்பிட்ட நாளுக்குப்பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கட்டணமும் விண்ணப்பமும் சங்க அலுவலக நேரங்களில் நேரிலும் பெற்றுக்கொள்ளப்படும்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அஞ்சல் பெட்டி எண் 215
மதுரை-1.

கி. பழநியப்பன்,
செயலாளர்.

இலக்கியச் சொற்பொழிவு

செந்தமிழ்க் கல்லூரியின், பாண்டித்துரைத்தேவர் மன்றம், மங்கையர்க்கரசியார் மன்றம் ஆகிய இவ்விரு மன்றங்களின் சார்பில் 8-9-67 அன்று நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன், M. A., அவர்கள் 'இலக்கியம்' என்ற பொருள்பற்றிச் சிறந்ததொரு விரிவுரையாற்றினார்கள். அவர்கள் பேசிய பேச்சின் விவரம் வருமாறு:

"பல்வேறு விதப் பொருட்கள் அடங்கியது உலகம். அப்பொருள்களைப் பற்றிப் பல வகையிலும் ஆராய்வது - ஆராயமுற்படுவது அறிவு. அத்தகைய அறிவு இரண்டு விதங்களில் செயல்படும். ஒன்று, பொருள்களைப் பொருள்களாகவே அணுகுவது. பொருள்களைப் பொருள்களாகவே அணுகுவது விஞ்ஞானம் அஃது எக்காலத்தும், என்றும், எப்பொழுதும், எல்லோருக்கும் ஒன்றாகவே அமையும். உதாரணமாகச் "சூரியன் கிழக்கில் உதிக்கும்" என்பது விஞ்ஞானம். இஃது எப்பொழுதும் மாறாது. சொற்றொடர் மட்டும் "சூரியன் உதிக்கும் திசை கிழக்கு" என்று மாறி வரலாமேயன்றிப் பொருள் மாறுவதில்லை இஃது அனைவரும் ஒப்பக்கொள்ளும், ஒப்புக்கொண்ட உண்மை. இதனை எல்லோரும் ஒரே மாதிரியான உள்ளத்தோடு - உளப்பாங்கோடுதான் ஏற்றுக்கொள்வர். இவ்வுண்மையை ஒருவர் மாற்றிக் கூறினால் கூறியவர்தான் பரிதாபத்திற்குரியவராகக் கருதப்படுவார். ஆனால் தன்மய அறிவால் உணர்ந்து கூறும் இலக்கியம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அது புலவர்களின் உள்ளப்பாங்கைப் பொறுத்து அவ்வப்போது அவரவருக்கேற்ப மாறுபடும். சூரியன் உதித்ததை ஒரு புலவர், "சூரியன் முருகனைப் போல் எழுந்தான்" என்று கூறுவார். சூரியன் உதித்தது உண்மை. அது விஞ்ஞானம். ஆனால் முருகனைப் போல் எழுந்தது என்பது புலவரது தன்மய உணர்வு அறிந்த உண்மை. எனவே அது தன்மய உண்மை. ஆனால் மற்றவர்களும் இந்த

உண்மையை ஏற்கவேண்டுமானுல், அந்த உண்மையை அவர்கள் உள்ளமும் உணருமாறு செய்யவேண்டும். அங்குத்தான் இலக்கியம் பிறக்க ஆரம்பிக்கிறது.

தன்மய உணர்வின் அடிப்படையில்தான் ஓவியமும் சிற்பமும் எழுகின்றன. ஆயினும் அவை இலக்கியம் போன்று கருத்தினை உள்ளத்தில் ஆழப் பதியச் செய்ய முடியாது. ஏனெனில் ஓவியனும் சிற்பியும் தம் உணர்வினை ஓரளவு தான் வெளிப்படுத்த முடியுமேயன்றி இலக்கியம் போலப் பாவத்தைக் கொட்டி வெளிப்படுத்த முடியாது. ஆனுல் புலவன் தன்மய உணர்வைத் தகுந்த சொற்களான் வடிக்கிருன்; ஆகவே தன்மய உணர்வும் சொல்லும் இணைவதால் பாவ உணர்ச்சி மிகுகின்றது. அதனுல் புலவன் கூறவந்த கருத்துத் தெளிவாகப் புலப்படும்.

இனி, வெறும் சொல் மட்டும் முழு உணர்வையும் உணர்த்தாது என்பதையும், முழு உணர்ச்சியையும் வெளிப் படுத்துவது எங்ஙனம் என்பதையும் காண்போம். புலவன் தன்கருத்தைச் சொற்களால் கூறுவான். அச்சொற்கள், புலவன உள்ளம் எந்த உணர்வோடு கண்டதோ அதே உணர்வுடனே படிப்பவர்களும் உணரும்படி அமையவேண்டும். ஏனென்ருல் ஒவ்வொரு சொல்லிற்கும் சூழ் பொருள் தொனிப்பொருள் என்ற சிறப்புப்பொருள்களும் இருக்கும். ஆகவே அப்பொருள் களும் அமையும்படி இருந்தாலும் அவரவர் அனுபவப் பொருள் மாறிவிடக்கூடியதாக இருக்கும். உதாரணமாக, ஒருவர் தாமரைக்கொடியைப்பற்றி அழகுறக்கூறியிருப்பார்; அதனைச் சிலர் நன்கு உணர்வார்கள். ஆனுல், ஒருவர் தாமரைக்கொடியால், குளத்தில் இறங்கிய ஞான்று, இன்னலுற்று இருந்திருப்பார். அவருக்கு மட்டும் தாமரைக் கொடியின் அழகைவிட, அதன் இன்னல்தான் முதலில் நினைவில் வரும். இதுதான் அனுபவப்பொருள் என்பது. ஆனுல் இந்தப் பொருளையும் மீறி அதன் அழகுணர்ச்சியே மிகுந் திருப்பது போலத் தோன்றுமாறு பாடினுல் அதுவே இலக்கியத்தின் அடித்தளமாக, சிறப்பாக அமையும்.

அப்பொழுது புலவன் உள்ளமும், படிப்பவர் உள்ளமும் ஒரு நிலைத்தாகின்றன. அப்பொழுதுதான் புலவனின் தன்மய உண்மை பலரும் ஏற்கும் உண்மையாகின்றது.

இதுகாறும், இலக்கியத்தின் பொதுத்தன்மை கண்டோம். இனி, இலக்கியம் படைக்கும் விதம் காண்போம். இலக்கியத்திற்குத்தேவையான தன்மய உணர்வையும் (உண்மை) கற்பனைச் சொற்களால் சூழ்பொருள் தொனிப் பொருள் தோன்றக் கூற வேண்டும். அத்தகைய சொற்களை ஒன்றோடு ஒன்றைப் பெருக்கி அவற்றை உருவாக்க வேண்டும். அங்ஙனம் தொகுக்குங்கால் அவற்றை அணிமுதலியவற்றால் அழகுபடுத்தி இலக்கணவரம்பிற்குட்படுத்தியே கூற வேண்டும். இவை யிரண்டும் இலக்கியத்திற்கு இன்றியமையாதன. அணிகள் என்றால் அலங்காரம். புலவனின் உள்ளக்கருத்தை அழகுபடுத்துவன அணிகள். அஃது எந்த அணியினும் அல்லது எத்தனை அணிகளைக்கொண்டும் அமையலாம். அமையின் குற்றமில்லை. உதாரணமாக "உள்ளத்தனைய துயர்வு" என்று கூறும் பொழுதைவிட "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு" என்று கூறும் போது தெள்ளிதின் விளங்குகின்றதல்லவா? சுருக்கமாகக் கூறினால், அணிகளே இலக்கியத்திற்கு உயிர் ஊட்டுகின்றன என்று கூறலாம். இங்ஙனமாக அமைந்த காரணத்தினால்தான் சங்க கால நூல்களும் பிற்கால நூல்களும் நம் உள்ளத்தை வசப்படுத்திக் கொள்கின்றன. திருமுருகாற்றுப் படையைப் படிக்குங் காலத்து நாமே நக்கீரராக மாறுகிறோம். ஆழ்வார் பாடல்களைக் காணுங்கால் நாமும் ஆழ்வார்கள் உள்ளத்தையும், பெரிய புராணத்தைப் படிக்குங் காலத்துச் சேக்கிழார் உள்ளத்தையும் பெறுவது இத்தகு தன்மைகளினால்தான் எனலாம்.

கடைசியாக, ஒரு புலவன் இலக்கியம் படைக்கும் விதத்திற்கோர் எடுத்துக்காட்டைக் காண்போம்.

வானிலே, நிலவும், விண்மீன்களும் ஒளி விட்டுக்கொண்டு இருந்த நேரத்தில் ஓர் புலவர் (கம்பர்) வீதியிற் சென்று

கொண்டிருந்தார். அவர் சற்றே நிமிர்ந்து ஆகாயத்தை நோக்குகிறார். அவர், நாம் காணும் நிலவையும், மீன்களையும் தான் கண்டார். ஆனால் அவருக்கு ஓர் அரிய உண்மை புலனாயிற்று. அந்தத் தன்மய உண்மையை அவர் கூறும் அழகே அழகு! முதலில்,

"பெருந்திண் நெடுவரை ஒன்றைப் பிணித்த பாம்பின் மணித்தாம்பின்" என்று தொடங்குகிறார். அதைப்பார்த்தவுடன் "மிகவும் வியப்பாக இருக்கிறதே! ஒரு பெரிய மலையைப் பிணிக்கும் தன்மையுள்ள பாம்போ?" என்று படிப்போர் மிகுந்த ஆவலுடன் அடுத்துள்ள வரியை நோக்குவர். ஆங்கே, "விரிந்த தலையின் உதிர்ந்த மணி விசும்பின் மீனாய் மேல் விளங்க" என்று கூறுகிறார். அஃதாவது 'மலையைச் சுற்றிப் பிணித்திருந்த பாம்பின், விரிந்த தலையினின்றும் உதிர்ந்த மணிகள் ஆகாயத்தில் விண்மீன்களாக விளங்க' என்று கூறவும் விண்மீன்கள் தோன்றிய விதம் இதுவாக இருக்கும் என்று இவர் காண்கிறார் என்பது விளங்கும். அதனோடு, பாம்பின் தலையிலிருந்து மணிகள், ஏன், எப்பொழுது விழுந்தன என்ற கேள்வி பிறக்கவே, அடுத்துள்ள பகுதிகளைப் பார்க்கிறோம். அங்கே, "அருந்த அமரர் கலக்கியநாள் அமுதம் நிறைந்த பொற்கலசம் இடை எழுந்ததென." என்று அமைக்கின்றார். அப்போதுதான் அவர், நிலவையும், மீனையும் எந்தக் கருத்தின் அடிப்படையில் கண்ணோட்டம் செலுத்தியிருக்கின்றார் என்று அறியமுடிகிறது. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தகதை அனைவரும் அறிந்ததே. அப்பொழுது மந்தரமலையைப் பிணித்திருந்த வாசுகி என்னும் பாம்பைக் கொண்டு பிணித்துக்கடைந்தது அனைவரும் உணர்ந்த கருத்து. ஆனால் அதனோடு நிலவைத் தொடர்பு படுத்திக் கண்டிருக்க மாட்டார்கள்; அப்பொழுதுஎழுந்தன இவை என்று கூறவும் தோன்றியிராது.

இப்படி, படிப்போர் உள்ளத்தை ஈர்த்துத் தன்மய உண்மையைப் பிறர் தம்முடைய உள்ளவுணர்வு கொண்டே

அனுபவிக்கும் படியாகக் கூறுவதே சிறந்த இலக்கியமாகும். அதனை உணராததால்தான் நாம் தற்பொழுது சிறந்த இலக்கியத்தை உருவாக்கமுடியாதநிலையிலிருக்கிறோம். இதை உணர்ந்த பின்னராயினும் நாம் அந்த முறையிலே நல்ல இலக்கியங்களைப் படைக்கத் தொடங்க வேண்டும். *

மதிப்புரை

'வாழ்வு நெறி'

[தொகுப்பு ஆசிரியர்: டாக்டர் வி. கே. இராமச்சந்திரன் M. D., வெளியீடு: வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராசவீதி, புதுக்கோட்டை, பக்கங்கள் 118; விலை 1-50]

'வாழ்வுநெறி' என்ற நூல், அண்ணல்சுப்பிரமணியனுர் என்ற அறிஞர், பல ஆண்டுகளாக இளமாணவர்களுக்கு நிகழ்த்திய அறிவுரைகளின் தொகுப்பாகும். தொகுப்பாசிரியர் டாக்டர் வி. கே. இராமச்சந்திரன் அவர்கள் மிக நல்ல முறையில் இதனைத் தொகுத்துள்ளார். 21 தலைப்புக்களில் மாணவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் பயன்படும் வகையில் அரிய பொருள்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பல உலகப் பேரறிஞர்களின் நூல்களிலிருந்தும், வாழ்க்கை வரலாறுகளிலிருந்தும் சான்றுகள் காட்டப்பட்டுத் திருக்குறள் விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன. இவை மிகப்பயனுடையனவாகும். இந்நூலின் தனிச்சிறப்பு நல்ல தமிழில் பிற 'எழுத்துக்கள்' ஒன்று கூடக்கலவாமல் எழுதப்பெற்றிருப்பதாகும் எந்த ஒரு மொழியாயினும் அதன் பெயர்ச்சொற்களைத் தமிழ் எழுத்துக்களாலேயே எழுத முடியும்

* இப்பேச்சினைத் தொகுத்து அளித்தவர்: கல்லூரி மாணவி செல்வி: பாமா.

என்பதை, இந்நூல் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. இதற்கு ஒரு விதி விலக்கு, இதனை அச்சிட்ட அச்சகத்தாரின் பெயரே யாகும். அதனையும் தமிழில் பொறித்திருக்கலாம்!.

— மதுரைக் குமரன்

அறநெறி விளக்கம்

[ஆசிரியர்: கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர். வெளியீடு: செந்தமிழ் நிலயம், நாவலரகம், நாகர்கோவில்-2. பக். 68. விலை ரூ 1–50.]

இந்நூல், திருக்குறள், நாலடியார், பழமொழி முதலான அறநூல்களின் கருத்துக்களை இனிதுவிளக்குவது. திருக்குறளைப் போலவே அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் முதலான முப்பால்களையும், இல்வாழ்க்கை, மக்கட்பேறு, விருந்தோம்பல், இனியவை கூறல் முதலான அதிகாரத்தலைப்புக் களையும்கொண்டு திகழ்வது. இந்நூலாசிரியர், பன்னூற்பயிற்சி மிக்குடையார் என்பதை இதில் வரும் பாக்களின் துணை கொண்டு அறியலாம். பாடல்களும், எளிய, இனிய முறையில் அனைவரும் விளங்கிக்கொள்ளுமாறு அமைந்துள்ளன.

"எவ்வெவர் மாட்டு மினியன செய்குநர்க்
கெவ்வம் புரிபவர் யார்கொலோ — செவ்விதின்
நன்மை தருங்கனி யீயு நயமிக்க
வின்மரங் கொல்வா ரெவர்"

என்னும் பாடலை இதற்குச் சான்றாகக் கூறலாம். அனைவரும் கற்றுப் பயன் பெறுவார்களாக!

'நெறி வெண்பா'

[ஆசிரியர் இராமசுப்பிரமணிய நாவலர். பக். 8. விலை 25 காசு]

42 வெண்பாக்களையுடைய இச் சிறுநூல், சிறந்த நெறி களைத் தொகுத்துரைக்கிறது. திருக்குறளின் சாரமாக இந்நூலாசிரியர் இதனை ஆக்கியுள்ளமை பாராட்டுக்குரியது.

சா கூ

சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை 3ஆம் சூத்திரம் – ஆன்மஇலக்கணம்

[வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம். பக். 94.]

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் ‘சிவப்பிரகாசம்’ என்பதும் ஒன்று. இதனை நம்மனோர்க்கு அருளிய பெரியார் திரு. உமாபதி தேவநாயனாராவர். இவர் புறச் சந்தான குரவர் நால்வரில் ஒருவர். இவர், சிவஞான போதத்தையும், சிவஞான சித்தியாரையும் தம் குருவின் திருவருளால் அறிந்துகொண்டு, தாமும் நன்கு ஆராய்ந்தும், சிந்தித்தும், தெளிந்தும், தெய்வத் திருவருள் விளக்கியருளச் சிவாகமங்களுக்கு உகந்தமுறையில் இந்நூலினை ஆக்கியுள்ளார். இந்நூல் நூறு திருவிருத்தங்களைக்கொண்டது. பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என இரண்டு அதிகாரங்களை உடையது. உண்மை அதிகாரத்தில் வரும் 50 திருவிருத்தங்கள் சிவஞான போதம்-சித்தியார்களின் 3ஆம் சூத்திரம் முதல் 12ஆம் சூத்திரம் வரையுள்ள செய்திகளைக் கூறுகின்றன. ‘சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை’ என்னும் நூலில், 3ஆம் சூத்திரச் செய்திகள் விளக்கப்படுகின்றன. இதில் வரும் விருத்தங்கள், பெரும்பாலும் ஆன்மாவைப்பற்றிய கருத்துக்களையே கழறுகின்றன எனலாம். இச் சீர்மைக் கட்டுரையில், 9 திருவிருத்தங்கள் உள்ளன. இவை முறையே, உண்மையதிகாரத்தின் இயல் முறைமை, ஆன்மா உடம்புள் உறைதல், ஆன்மசாதனம் உணர்த்துகை, முன்பே ஆன்மாவுக்கு அறிவு உண்டென்பது, பசுபோதத்தால் அறியப்படுவன யாவும் அசத்தாதல், சத்து அசத்து அறிதல், அருள் கண்ணாக ஆன்மா அறிதல், ஆன்மா சிற்றறிவு உடையது, ஆன்மா அறியும் முறைமை முதலானவற்றை விளக்குகின்றன. உயிரின் தத்துவத்தை எளிய, இனியமுறையில், அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில், எழுதி உதவிய இக்கட்டுரை ஆசிரியர் திரு தே. ஆ. சீனிவாசன் அவர்கட்கு நமது பாராட்டு உரியது. இத்தகைய அரிய சமய நூல்களை வெளியிட்டுச் சைவத்தின் ஆக்கத்திற்குப் பாடுபட்டு வரும் திருப்பெருந்திரு திருவாவடுதுறை ஆதின குருமகா சந்நிதானம் அவர்கட்குத்

தமிழ்ப்பெருமக்கள் என்றும் கடமைப்பட்டுள்ளனர். இத்தகு நூலை அனைவரும் படித்துப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவார்களாக!

திருக்கழுமல மும்மணிக் கோவை: குறிப்புரையுடன்

[வெளியீடு: தருமையாதீனம். பக் 41]

சைவத்திருமுறைகள் பன்னிரண்டென்ப. அவற்றுள், பதினொன்றாந் திருமுறை, இயற்றமிழ்ச் செய்யுள் வகைகளாகிய பல்வகைப் பிரபந்தங்களாய் அமைந்துள்ளது. இப்பிரபந்தங்களில், பட்டினத்தடிகள் அருளிச்செய்த 'திருக்கழுமலமும்மணிக் கோவை' என்பதும் ஒன்று! கழுமலம் என்பது சீகாழிப் பதியைக்குறிக்கும். அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்ட நூல் இது! இப்பிரபந்தத்திற்குள்ள பல்வகைச் சிறப்புக்களுள் ஒன்று, தெய்வப்புலவர் சேக்கிழாருக்கு முன்பே திருஞானசம்பந்தர் ஞானப்பால்உண்டு, ஞானம்பெற்ற வரலாற்றைத் தெளிவுபட விளக்கிச் செல்வதாகும்

"தாதையொ டுவந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் னின்று
....
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே!"

என்பன போன்ற அடிகள் நம் உள்ளத்தைப் பிணித்து அருட் கடலிற் கொண்டு உய்ப்பனவாகும். இந்நூலுக்குத் திரு. சி. அருணை வடிவேல் அவர்கள் அரிய குறிப்புரை வழங்கியுள்ளனர். தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிவரும் திருப்பெருந்திரு தருமையாதீனம் குருமகாசந்நிதானம் அவர்களால் வெளியிடப் பெற்ற இந்நூலை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும்.

நாடகக் கலை

[ஆசிரியர்: அவ்வை டி. கே. சண்முகம், வெளியீடு, சங்கரதாசு சுவாமிகள் நினைவு மன்றம், 27, சீனிவாசப்பெருமாள் 3-வது தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.]

முத்தமிழுள் ஒன்றான நாடகக் கலையில் தலைசிறந்து

விளங்குபவர் அவ்வை திரு. டி. கே. சண்முகம். அதில் அவர் பெற்றுள்ள அனுபவங்கள் பல. அவற்றால் அவர் உருவாக்கிய நூலே 'நாடகக்கலை' என்பது. தமிழ் நாடகவரலாறு, நடிப்புக்கலை, நாடகத்தில் பிரசாரம் என்ற முப்பெரும் தலைப்புக்களில், தம் ஆறும் வயதில் நடிக்கத் தொடங்கியதிலிருந்து இன்று, நாடக சாலை, நல்லகலாசாலையாக நாட்டில் தோன்ற வேண்டும் என்று கூறுவதுவரை, பல்வேறு கோணங்களில் நாடகத்தைத் திறனாய்வுசெய்து. தமிழ் மக்களுக்கு வழங்கு கின்றார் ஆசிரியர். இந்நூல் தமிழ் நாடக வரலாற்றை அறிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிய வல்லது,

சங்கரதாசு சுவாமி நூற்றாண்டு விழா மலர்

[வெளியீடு: சங்கரதாசு சுவாமிகள் நினைவுமன்றம், சென்னை 14. பக்கம் 240]

'தமிழ் நாடகக் கலை' என்ற உடனே, நம் கண்முன் நிற்பவர் தவத்திரு. சங்கரதாசு சுவாமிகளேயாவர். தமிழ் நாடகக் கலைக்கு அவர் செய்த பணிகள் பலப்பல. சுவாமிகளின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள பேரறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோர், சுவாமிகளின் புலமை, நாடகப்பணி இவற்றைக் குறித்து அரிய கட்டுரைகள், கவிதைகள் வழங்கியுள்ளனர். கண்ணைக்கவரும் வகையில் சுவாமிகளின் திருவுருவப்படம் அமைந்துள்ளது. மலரில், சுவாமிகளின் பல்வகைக் கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பழம் பெரும் நடிக, நடிகையர் படங்கள், நாடகத் தமிழ் வளர்க்கும் நல்லாசிரியர் படங்கள் இடம் பெற்றுள்ளன. நாடகத்தைப் பற்றி நன்கறிய இம்மலர் பெரிதும் துணைபுரியும். இவ்வரிய மலர் உருவாவதற்குத் துணை நின்ற அவ்வை தி. க. சண்முகம் அவர்கட்கு நமது பாராட்டு!

ச. சாம்பசிவன்.

குறிப்பு: மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர், ஒவ்வொன்றிலும் இரண்டு படிகள் வீதம் அனுப்பவேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	வைத்திய சாரசங்கிரகம்	...	ரூ.	7—00
2.	பன்னூற்றிரட்டு	...	ரூ.	3—00
3.	தமிழ்ச் சொல்லகராதி	முதற்பாகம்	ரூ.	10—00
		மூன்றாம் பாகம்	ரூ.	10—00
4.	தொல்-செய்யுளியல்-நச்சினார்க்கினியர் உரை		ரூ.	2—00
5.	மாறனலங்காரம் (மூலமும்-உரையும்)		ரூ.	6—00
6.	பெருந்தொகை	...	ரூ.	7—00
7.	அரும்பொருள் விளக்க நிகண்டு		ரூ.	1—25
8.	தமிழ்ச் சங்கத் தொகுப்பு:			
	முதற் பாகம்	கோவை நூல்கள்	ரூ.	3—00
	இரண்டாம் பாகம்	உலா நூல்கள்	ரூ.	3-00
	மூன்றாம் பாகம்	பாமாலை நூல்கள்	ரூ.	3—00
	நான்காம் பாகம்	இலக்கிய நூல்கள்	ரூ.	5—00
	ஐந்தாம் பாகம்	இலக்கண நூல்கள்	ரூ.	3—00
	ஆறாம் பாகம் மனீஷாபஞ்சகம் முதலிய நூல்கள்			2—00
9.	தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்		ரூ.	2—00
10.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்		ரூ.	0—50
11.	சுகசந்தர்சன தீபிகை	...	ரூ.	0—50
12.	தமிழர் வாழ்வு	...	ரூ.	3—50

குறிப்பு: 1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25% முன் பணம் அனுப்பவேண்டும். பாக்கித் தொகைக்குப் புத்தகங்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

2. ரே தடவையில் ரூ. 50-க்கு மேல் புத்தகம் வாங்குவோர்க்கு கழிவும் ரூ. 100-க்கு மேல் புத்தகம் வாங்குவோர்க்கு கழிவும் கொடுக்கப்படும்.

3. த்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குவோரே ஏற்கவேண்டும்.

" செந்தமிழ் "

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இம்மலர் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப் பெறுவது. ஆண்டுச்சந்தா ரூ. 3—00.

புலவர்கள்பலர்எழுதிய அரியகட்டுரைகள், ஆய்வுரைகள்கொண்ட பழைய "செந்தமிழ்" இதழ்கள் ஆண்டுவாரியாகப் பைண்டு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விலை தனித்தனி ரூ. 5—00.

தேவைக்கு.

" மேலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1. "

என்ற முகவரிக்கு எழுதவும்.

இவ்விதழ் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. ப. டி. இராசன் அவர்களால் மதுரை இளங்கோ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.